Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37
கதிர் : 165
செவ்வாய்க்கிழமை
10 மே 2022
சித்திரை 27 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053
பக்கங்கள்: 16
விலை : ரூ. 50

**குமாரவெல்கம மீதும் தாக்குதல்** பக்.10

**மஹிந்தவை கைது செய்** கூட்டமைப்பு ஆவேசம் பக்.10

**சஜித் விரட்டியடிப்பு!** பக்.10

மஹிந்த ஆதரவுக் காடையர்களின் தாக்குதலையடுத்து

# தென்னிலங்கையில் பெரும் கலவரம் ஆளும் கட்சி எம்.பி. உட்பட 4பேர் சாவு!

காயங்களுடன் 181பேர் மருத்துவமனைகளில் சேர்ப்பு
நாடு முழுவதும் நாளை காலை வரை பொலிஸ் ஊரடங்கு



கொழும்பு, மே 10

மஹிந்த ராஜபக்ச கூட்டிய அலரி மாளிகை கூட்டத்தைத் தொடர்ந்து அமைதிவழிப் போராட்டங்கள் மீது வன்முறைகள் ஏவிவிடப்பட்டன. அதற்குப் பதிலடியாக அமைதிவழிப் போராட்டக்காரர்களும் வன்முறையை தேர்ந்தெடுத்ததால் தென்னிலங்கை பற்றியெரிகின்றது. ஆளும் கட்சியான சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் பொலநறுவை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர், அவரின் மெய்ப்பாதுகாவலர் உட்பட இதுவரை 4 பேர் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டுள்ளதுடன், 181 பேர் காயங்களுடன் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். 15 ➤

ராஜபக்சக்களின்

## பூர்வீக வீடும் தீக்கிரை: நினைவுத்தூபியும் தகர்ப்பு!

கொழும்பு, மே 10

ராஜபக்சக்களின் பெற்றோரான டீ.ஏ.ராஜபக்ச மற்றும் தோன தந்தினா ராஜபக்ச ஆகியோரின் நினைவாக அம்பாந்தோட்டை மெதமுலனவில் அமைக்கப்பட்டிருந்த நினைவுத்தூபி ஆர்ப்பாட்டக்காரர்களால் நேற்று மாலை சேதமாக்கப்பட்டுள்ளது. அத்துடன் மெதமுலனவில் உள்ள ராஜபக்சவினரின் பரம்பரை வீடும் தீ வைத்து எரிக்கப்பட 10 ➤

## ஆளுங்கட்சி அரசியல்வாதிகளின் வீடுகள் இரவிரவாகத் தீக்கிரை!

மஹிந்தவின் வீடும் தப்பவில்லை
எரியும் வீடுகளில் ஆள்களில்லா மர்மம் என்ன? பக்.15

## இவர்கள் அவர்களில்லையாம்!!!

பிரதமர் ஊடகப் பிரிவு அறிக்கை

கொழும்பு, மே 10

அலரி மாளிகையில் இடம்பெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் மீது பழி சுமத்துவதற்காக 15 ➤

வானை நோக்கி துப்பாக்கிச்சூடு

## அலரிமாளிகைக்குள் நுழைய போராட்டக்காரர்கள் முஸ்தீபு!!

வாகனத்துக்கு தீ வைப்பு பக்.10

வன்முறைகளைத் தூண்டிவிட்டு

## மஹிந்த பதவி விலகினார் வர்த்தமானியிலும் வெளியீடு

பக்.10

தாக்குதலைக் கண்டித்து

## 2 ஆயிரம் தொழிற்சங்கங்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தில்

பக்.10

## தெய்வம் நின்று கொல்லும்!

பக்.10

## குண்டர்கள் நிர்மூலமாக்கிய கிராமங்கள் மீண்டெழுந்தன

கொழும்பு, மே 10

அலரிமாளிகையிலிருந்த ஏவப்பட்ட குண்டர்களால் மைனா கோ கம மற்றும் கோத்தா கோ கம 10 ➤

## யோசித ராஜபக்ச தப்பியோட்டம்!!!

பக்.10

## குறுகிய அரசியலுக்காகவே அமைதிப்போரில் வன்முறை

மகாநாயக்கர்கள் குற்றச்சாட்டு பக்.10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹிந்தவின் விலகலையடுத்து பாற்சோறு பொங்கி ஆர்ப்பரிப்பு!

## அவரின் சொந்தவூரிலும் கொண்டாட்டம்



**கொழும்பு, மே 10**
**மஹிந்த பதவி விலகியதை அடுத்து பொதுமக்கள் பட்டாசு கொளுத்தி பாற்சோறு பொங்கி கொண்டாட்டங்களில் ஈடுபட்டனர்.**

பிரதமர் மஹிந்த ராஜபக்ச நேற்றுப் பதவி விலகுவார் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், நேற்றுக்காலை அவர் அலரிமாளிகையில் பெரமுனவினருடன் பேச்சுக்களில் ஈடுபட்டார். இதையடுத்து பெரமுனவின் குண்டர்கள் குழு, அரச எதிர்ப்பாளர்கள் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்த இடங்களில் வன்முறைகளில் ஈடுபட்டது. பல்கலைக்கழக மாணவர்கள்பதில்தாக்குதல்நடத்தநிலைமை தீவிரமானது.

மஹிந்த நடத்திய கூட்டம்தான் அனைத்துக்கும் தூண்டுதலாக அமைந்தது என்றும் அவர்தான் இந்தக் கலவரங்களைத் தூண்டினார் என்றும் பலரும் குற்றச்சாட்டுக்களை முன்வைத்தனர். இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரான சங்கக்கார இந்தக் குற்றச்சாட்டை நேரடியாகவே முன்வைத்தார். இதனால் ராஜபக்சக்களுக்கு எதிரான போராட்டம் அடுத்த கட்டத்தை நோக்கி நகரலாம் என்று கருதப்பட்ட நிலையில் மஹிந்த பதவி விலகுவதாக அறிவித்தார்.

மஹிந்த பதவி விலகியதை அடுத்து கொழும்பின் நகர்ப்பகுதிகளிலும் புறநகர்ப் பகுதிகளிலும் அவரது சொந்த ஊரான தங்காலை பகுதிகளிலும் பட்டாசுகளைக் கொளுத்தி பாற்சோறு பொங்கி மக்கள் கொண்டாட்டங்களில் ஈடுபட்டனர். (ம)



## கைகூப்பி கெஞ்சக் கெஞ்ச குண்டர்கள் மீது தாக்குதல்

மஹிந்த ராஜபக்ச ஆதரவுக் குண்டர்கள் மீது பதிலடி தாக்குதல் நடத்தப்பட்டு அவர்கள் பல இடங்களில் சிறைப்பிடிக்கப்பட்டனர். இதன்போது அவர்கள் கெஞ்சக் கெஞ்ச மிக மோசமாகத் தாக்கப்பட்டனர். அவர்களின் ஆடைகளும் களையப்பட்டன.

## பொலிஸ் வாகனத்திலும் குண்டர்களுக்கு அடி உதை

மஹிந்த ஆதரவுக் குண்டர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு அழைத்துச் செல்லப்படும்போது பொலிஸார் முன்னிலையிலும் அவர்களுக்கு அடி உதை விழுந்தது.

## குண்டர்களுக்கு சிகிச்சையளிக்க மருத்துவமனையில் கடும் எதிர்ப்பு

குண்டர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் காயமடைந்தவர்களை இராணுவத்தளபதி சவேந்திர சில்வாவுக்குச் சொந்தமானது என்று கூறப்படும் இராணுவ வாகனத்தில் இராணுவ பாதுகாப்புடன் கொழும்பு தேசிய மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றபோதும் அங்கு மருத்துவர்கள், தாதியர்கள், சுகாதாரப் பணியாளர்கள், பொதுமக்கள் இணைந்து எதிர்ப்புத் தெரிவித்தனர்.

## குப்பை வண்டியில் குண்டர்கள்

கொழும்பு, மே 10
போராட்டக்காரர்கள் சிறைப்பிடிக்கப்பட்ட மஹிந்த ஆதரவுக் குண்டர் குழுவைச் சேர்ந்த ஒருவரை குப்பை வண்டியில் இருத்தி அடி உதையுடன் வீதி வீதியாக அழைத்துச் சென்றனர்.

## முற்றுகையிலிருந்து தப்பிப்பதற்கு பேரவாவிக்குள் பாய்ந்த குண்டர்கள்



மஹிந்த ஆதரவுக் குண்டர்கள் திடீரென போராட்டக்காரர்கள் சிறைப்பிடிக்கப்பட்ட நிலையில், அவர்கள் திக்குத்திசை தெரியாமல் தப்பி ஓடினர். இவ்வாறு ஓடியவர்கள் பலர் பேரவாவிக்குள் குதித்து தப்பிக்க முயன்றனர். இருப்பினும் அவர்களைச் சுற்றி வளைத்த போராட்டக்காரர்கள் முறையாகக் கவனித்தனர். அத்துடன் குண்டர்களை ஏற்றி வந்த பேருந்துகள், ஜீப்புகள் என 6 க்கும் மேற்பட்ட வாகனங்கள் பேரவாவிக்குள் தள்ளி வீழ்த்தப்பட்டு எரியூட்டப்பட்டன.

## தூணில் கட்டி வைத்து குண்டர்கள் மீது தாக்குதல்

மஹிந்த ஆதரவுக் குண்டர்கள் காலி வீதி வழியாகத் தப்பித்து ஓடும் போது பல இடங்களில் மடக்கிப்பிடிக்கப்பட்டனர். அவர்களை வீதியிலிருந்த மின்கம்பங்களில் கட்டி வைத்து பொதுமக்கள் கடுமையாகத் தாக்கினர்.

## இரண்டாயிரம் ரூபாவுக்காக குண்டர்களாகினோம்

அமைதிவழிப் போராட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்திய மஹிந்த ஆதரவுக் குண்டர்கள் மடக்கி சிறைப்பிடிக்கப் பட்டு முறையாகக் கவனிக்கப்பட்ட பின்னர் ஒப்புதல் வாக்குமூலங்களை வழங்கினர். 2 ஆயிரம் ரூபா பணமும், சாரயமும் வழங்குவதாகக் கூறி தம்மை அழைத்து வந்தனரென அவர்கள் தெரிவித்தனர்.

## பேருந்துகளை மறித்து குண்டர்கள் தேடுதல்



கொழும்பிலிருந்து வெளிச்செல்லும் அனைத்து பிரதான வீதிகள், அதிவேக நெடுஞ்சாலைகள் என்பன போராட்டக்காரர்களால் நேற்றிரவு முற்றுகையிடப்பட்டன. அதன் ஊடாகச் சென்ற அனைத்து வாகனங்களும் மறிக்கப்பட்டு, மஹிந்த ஆதரவுக் குண்டர்கள் மறைந்து தப்பிச் செல்கின்றனரா என்ற சோதனை போராட்டக்காரர்களால் முன்னெடுக்கப்பட்டது. (ஓ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# அமைச்சர்கள், எம்.பி.க்கள், மேயர்கள் வீடுகள் தீக்கிரை


சனத் நிஷாந்த


மஹிந்தவின் குருநாகல் வீடு


குருநாகல் மேயர் வீடு


விமல் வீரவன்ஸ


கனகஹேரத்



ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ



குருநாகல் பெரமுன அலுவலகம்


பந்துல குணவர்த்தன


மொரட்டுவ மேயர்


மஹிபால ஹேரத்



காஞ்சன விஜயசேகர


பண்டாரவளை மேயர்


ரமேஷ் பத்திரண

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# காலிமுகத்திடலில் கலவரம் கொழும்பில் உச்சப்பதற்றம்

















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரித்தழிக்கப்பட்ட கூடாரங்கள்


















மஹிந்த குண்டர்கள் தாக்கும் காட்சி



காலிமுகத்திடலில் தாக்குதலுக்கு இலக்கானவர்கள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













மஹிந்த ஆதரவுக் குண்டர்களை ஏற்றி வந்த பேருந்துகள் பல்வேறு இடங்களிலும் மறிக்கப்பட்டு, அடித்து நொருக்கப்பட்டன. சில இடங்களில் தீயிட்டும் எரிக்கப்பட்டன. (ஒ.இ)





குருநாகல் மேயருக்கு சொந்தமான வாகனம் ஆர்ப்பாட்டக்காரர்களால் அடித்து நொருக்கப்பட்டது. வாகனத்திலிருந்து சாராயப் போத்தல்களும் மீட்கப்பட்டன. (ஒ-இ)





அலரி மாளிகையில் மஹிந்தவுக்கு ஆதரவு தெரிவித்து நேற்றுக்காலை திரண்ட கும்பல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# அணையாத தீ

அனுமன் மூட்டிய தீ போல, இலங்கை முழுவதும் தீவைப்புச் சம்பவங்களும், வன்முறைகளும் நேற்றிலிருந்து முடிவின்றித் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றது. இப்பிடி ஒரேநாளில் இலங்கைத்தீவு வன்முறைக்களமாக மாறுவதற்கு பிள்ளையார்சுழி போட்டது மஹிந்தவின் ஆதரவாளர்களே. தனது செல்வாக்கை காட்டுவதற்காக பிரதமர் பதவியில் இருந்து விலகுவதற்கு முன்னதாக தனது ஆதரவாளர்களை அலரிமாளிகைக்கு அழைத்திருந்தார் மஹிந்த. அங்கு உருவேற்றப்பட்ட பின்னர் வெளியேறிய அந்தக் கும்பல், அரசாங்கத்துக்கு எதிராக அமைதியாகப் போராடிய இளைஞர்களை வலிந்து தாக்கி, கோத்தா கோ கமவை நிர்மூலமாக்கி, தங்கள் வெறியாட்டத்தை ஆரம்பித்தது. ஆனால், அதுதான் அவர்களுக்கே ஆப்பாக மாறியது. கோத்தா கோ கம தாக்குதலுக்கு இலக்காவதை அறிந்த ஆயிரக்கணக்கான இளைஞர்கள் அங்கே ஒன்றுதிரண்டு, பதிலடி கொடுக்க, இப்போது ஒட்டுமொத்த இலங்கையும் தீப்பிடித்து எரிந்துகொண்டிருக்கின்றது.

இலங்கையே பற்றியெரிந்துகொண்டிருக்கும் இந்தச் சமயத்தில், நடப்பவற்றையெல்லாம் அமைதியாக வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் தமிழ் மக்கள். இப்போது தெற்கில் நடக்கும் சம்பவங்கள் தமிழ் மக்களுக்கு 13 ஆண்டுகளுக்கு முன்னர் இதேநாள்களில் நடந்தவற்றை ஞாபகமூட்டும் என்பதில் எந்த மாற்றுக் கருத்துக்களும் இல்லை. அவற்றுக்கான தண்டனையே -கர்மாவே- இப்போது ராஜபக்சக்களுக்குக் கிடைக்கின்றது என்பது பெரும்பாலான தமிழ் மக்களின் நம்பிக்கை.

13 ஆண்டுகளுக்கு முன்னர் இதேநாள்களில் தமிழர் பகுதியில் இருந்து மேலேழுந்த கரும்புகையைக்கண்டு ஆனந்தக் கூத்தாடி பாற்சோறு கொடுத்துக் கொண்டாடியவர்கள் போரை முடித்தோம் என்று தம்பட்டம் அடித்த ராஜபக்சக்களை போற்றியவர்கள் இன்று அதே ராஜபக்சக்களைப் பதவியில் இருந்து விரட்டியமைக்காகப் பாற்சோறு கொடுத்துக் கொண்டாடுகின்றனர், அதே ராஜபக்சக்களைத் தூற்றுகின்றனர், நாட்டைக் கொள்ளையடித்தவர்கள் என்று ஏசுகின்றனர்,அவர்களின் வீடுகளையும், தூபிகளையும் எரிக்கின்றனர், இடித்தழிக்கின்றனர்.

ராஜபக்சக்களுக்கு எதிராக அகிம்சை வழியில் கடந்த ஒரு மாதமாகப் போராட்டங்களை நடத்திய சிங்கள மக்கள் அரச ஆதரவாளர்களின் வன்முறைகளை அடுத்துத் தாங்களும் வன்முறைகளைக் கையிலெடுத்திருக்கிறார்கள். ஆளும்தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டிருக்கின்றன. மஹிந்த ராஜபக்சவின் ஆதரவாளர்கள் விரட்டிப் பிடிக்கப்பட்டு, நையப்புடைக்கப்பட்டிருக்கிறார்கள்.

தமிழ் மக்களும் தங்கள் உரிமைகளுக்காக ஆரம்பத்தில் அகிம்சை வழியிலேயே போராட்டங்களை நடத்தினார்கள். ஆனால், சிங்களப் பேரினவாதிகள் தமிழ் மக்களின் அகிம்சைப் போராட்டங்களை கொடூரமாக அரச பயங்கரவாதத்தின் ஊடாக நசுக்கின. ஒருகட்டத்தில் அரச பயங்கரவாதத்தை எதிர்கொள்வதற்காக தமிழ் மக்கள் தற்காப்புக்காக ஆயுதம் ஏந்த வேண்டிய- வன்முறையைக் கையில் எடுக்கவேண்டிய -நிர்ப்பந்தம் ஏற்பட்டது, நேற்று காலிமுகத்திடலில் நடந்ததைப் போன்று-

தமிழ் மக்கள் நாட்டைப் பிரிப்பதற்காகவோ? சிங்கள மக்களிடம் இருந்து நாட்டைப் பறிப்பதற்காகவோ? ஆயுதங்களை ஏந்தவில்லை. தங்களின் நியாயமான கோரிக்கைகளுக்கான அகிம்சை வழிப் போராட்ட வழிகள் அடைக்கப்பட்டபோது வேறு வழியின்றி ஆயுதப் போராட்டம் நோக்கித் திரும்ப வேண்டியதாயிற்று. அரச பயங்கரவாதத்தின் கொடூர முகத்தை இப்போது நேரில் பார்க்கும் சிங்கள மக்கள் இனியாவது இந்த உண்மைகளை உணர்ந்து கொள்வது அவசியம்.


அதிகாரத்தில் உள்ளவர்கள் தங்கள் இலாபத்துக்காக இனங்களிடையே பகையை மூட்டிக் குளிர்காயும் தந்திரத்தை இனியாவது சிங்கள மக்கள் புரிந்துகொள்ளவேண்டும். சிறுபான்மையின மக்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றினால் நாடு முன்னேற்றம் அடையுமே தவிர, பிளவுபடாது என்பதை உணர்ந்து கொள்ளவேண்டும், கலகத்தில் இருந்தே தெளிவு பிறக்கும். சிங்கள மக்களுக்கு இப்போது கிடைக்கும் அனுபவம் அவர்களுக்குப் பல உண்மைகளை வெளிப்படுத்தும் என்று நம்புவோம். உண்மைகளை அவர்கள் உணர்ந்து கொண்டால் மட்டுமே ஆசியாவின் அதிசயமாக இலங்கை மாறும், இல்லாவிட்டால் இன்னும் இலங்கை எரிவதை யாராலும் தடுக்கமுடியாது.

"முன்னையிட்ட தீ முள்ளிவாய்க்காலிலே

## நாளொரு நல்வார்த்தை

"பணத்தின் மீது உங்கள் நம்பிக்கையை வைக்காதீர்கள், ஆனால் நம்பிக்கையின் மீது உங்கள் பணத்தை வையுங்கள் "

– ஒலிவர் வெண்டெல் ஹோல்ம்ஸ்




# அரசாங்கத்துக்கு எதிராக யாழ். போதனாவில் போர்

**யாழ்ப்பாணம், மே 10**

**இலவச சுகாதார சேவை கடுமையாக வலுவிழந்து விட்ட நிலையில், அரசாங்கத்துக்கு எதிராக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு முன்பாக நேற்றுப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.**



அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம் பெற்ற இந்தப் போராட்டத்தில் பெருமளவான வடக்குமாகாண மருத்துவர்களும், தாதியர்களும் மற்றும் சக மருத்துவப் பணியாளர்களும், நிர்வாகப் பணியாளர்களும் கலந்து கொண்டனர்.

இந்தப் போராட்டம் தொடர்பில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் கிளை விடுத்துள்ள அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

இலவச சுகாதார சேவை கடுமையாக வலுவிழந்து விட்டது. இதனால் நிச்சயம் உயிரிழப்புகள் அதிகரிக்கும். சிறுவர்களின் கல்வி சீரழிக்கப்பட்டுள்ளது, சிறுவர்கள் பட்டினியால் வாடுகின்றனர். இதற்குரிய தீர்வாக எதனையும் வழங்க இன்னமும் நாடாளுமன்றம் தயாரானதாகத் தெரியவில்லை.

சகிக்க முடியாத மோசடிகளால் இந்த நாட்டு மக்களின் அடிப்படைத் தேவைகளான உணவு, கல்வி, சுகாதாரம் என்பவற்றை எட்டாக்கனியாக்கி மக்களைத் தெருவில் அலையவிட்டு, தங்களின் கதிரைகளை இறுகப்பற்றிக் கொள்வதற்காக அவசர காலச் சட்டத்தை அரசாங்கம் பொருத்தமற்ற நேரத்தில் நடைமுறைப்படுத்தியுள்ளது - என்றுள்ளது.

(ம-26)

# யாழ். போதனாவில் மருத்துவப் பேரிடர்

## அனைத்து மருத்துவ சேவைகளும் நிறுத்தம் பிரதிப்பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 10

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் பெரும் மருத்துவப் பேரிடர் ஏற்பட்டுள்ளது. இதனால், அத்தியாவசியம் தவிர்ந்த அனைத்து மருத்துவ சேவைகளும் நிறுத்தப்பட்டுள்ளன - என்று தெரிவித்தார் யாழ் போதனா மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளர் ஶ்ரீபவானந்தராஜா.

யாழ். போதனா மருத்துவமனையின் முன்பாக நேற்று மேற்கொள்ளப்பட்ட போராட்டத்தின் பின்னர், தற்போதைய நிலை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

யாழ். போதனா மருத்துவமனையில் தற்போது மருத்துவப் பேரிடர் ஏற்பட்டுள்ளது. அத்தியாவசியமான சேவைகள் தவிர்ந்த ஏனைய சேவைகள் நிறுத்தப்பட்டுள்ளன. எனவே பொதுமக்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்படவேண்டும். தமது உடலாரோக்கியம் தொடர்பில் உச்சப்பட்ச எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும். விபத்துக்கள் போன்றவற்றில் சிக்காமல் இருப்பதை உறுதிப்படுத்த வேண்டும் - என்றார்.

(ம-26)

நாளை 11.05.2022 புதன்கிழமை

சுபநேரம் : 04.24 - 05.54
ராகுகாலம்: 11.54 – 01.24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராட்டத்தை ஒடுக்கினால் பேச்சுக்களில் இணையேன்!

## அரசாங்கத்துக்கு ரணில் எச்சரிக்கை



கொழும்பு, மே 10

அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தி அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்களை ஒடுக்கினால், பொருளாதாரத்தை மேம்படுத்தும் எந்தப் பேச்சுக்களிலும் அரசாங்கத்துடன் இணையமாட்டேன் என்று தெரிவித்தார் ரணில்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற கலவரம் மற்றும் அதன் பின்னரான பதற்றநிலை தொடர்பில் கட்சித் தலைவர் கூட்டத்தில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். (ம)

# காலிமுகத்திடல் வன்முறை அமெரிக்கா கடும் கண்டனம்



கொழும்பு, மே 10

அமைதியான முறையில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது நிகழ்த்தப்பட்ட தாக்குதல்களை அமெரிக்கா வன்மையாகக் கண்டித்துள்ளது.

இது தொடர்பில் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தனது ருவிற்றரில், சம்பவம் குறித்து உரியவாறு விசாரணைகளை நடத்துமாறு வலியுறுத்துகின்றோம் என்றும் கோரியுள்ளார். (க-இ)



# வன்முறை வேண்டாம் மஹிந்த திடீர் ருவிற்

கொழும்பு, மே 10

காலி முகத்திடலிலும் கொழும்பின் இதர பகுதிகளிலும் அரசாங்கத்துக்கு ஆதரவான கும்பலால் வன்முறை வெடித்துள்ள நிலையில், 'வன்முறைகள் வேண்டாம்' என்று தனது ருவிற்றரில் பதிவிட்டுள்ளார் பிரதமர் மஹிந்த ராஜபக்ச.

இதுதொடர்பில் அவர் தனது பதிவில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

உணர்ச்சிகள் மேலிடும்போது பொதுமக்கள நிதானத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். வன்முறைகள் வன்முறைகளைத்தான் தரும் என்பதை நினைவில் கொள்ளுங்கள். அவை ஒருபோதும் தீர்வைத் தராது. நாடு தற்போது சந்தித்துள்ள பொருளாதாரப் பெருநெருக்கடிக்கு ஒரு நிரந்தரத் தீர்வுதேவை. அதைத் தீர்க்க எமது நிர்வாகம் உறுதிபூண்டுள்ளது - என்றுள்ளது. (ம)

# நாட்டின் பிரச்சினைகளை வன்முறைகள் தீர்க்காது!

## ஜனாதிபதி தெரிவிப்பு



கொழும்பு, மே 10

அரசியல் சார்புகளைப் பொருட்படுத்தாமல், தூண்டிவிட்டு பங்கேற்பவர்களால் நடைபெறும் வன்முறைச் செயல்களை வன்மையாகக் கண்டிக்கிறேன் என ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்தார்.

நேற்றைய கலவரம் தொடர்பில் வெளியிட்டுள்ள சமூக வலைத்தளப் பதிவிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்தப் பதிவில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

தற்போதைய பிரச்சினைகளை வன்முறை தீர்க்காது. ஆகையால், அனைத்துக் குடிமக்களும் அமைதியாகவும் நிதானமாகவும் இருக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். மேலும் இந்த நெருக்கடியைத் தீர்க்க அனைவரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும் - என்றார். (ம)

# காலிமுகத்திடலில் இராணுவத் தளபதி

கொழும்பு, மே 10

காலிமுகத்திடலில் நேற்று கலவரம் வெடித்துள்ள நிலையில், இராணுவத் தளபதி சவேந்திர சில்வா நேற்று அந்தப் பகுதிக்கு நேரடியாகச் சென்று நிலைவரங்களைக் கண்காணித்தார்.

காலிமுகத்திடலில் பொலிஸாரே பாதுகாப்புப் பணிகளை மேற்கொண்டு வந்த நிலையில், இராணுவத் தளபதியின் பயணத்தை அடுத்து அந்தப் பகுதியின் பாதுகாப்பு படிப்படியாக இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுக்குக் கொண்டுசெல்லப்பட்டது. (ம)

# பெரமுனவின் காடையர்களுக்கு எதிராக கொழும்பு மருத்துவமனையில் போராட்டம்

கொழும்பு, மே 10

காலிமுகத்திடலில் அரச எதிர்ப்பாளர்கள் மீது நேற்று வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டதை அடுத்து, கொழும்பு தேசிய மருத்துவமனை வளாகத்தில் மருத்துவர், தாதியர்கள் மற்றும் ஊழியர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மஹிந்தவின் ஆதரவாளர்களால் ஆர்ப்பாட்டக்களம் அடித்து நொருக்கப்பட்டதுடன், பலர் மீது தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதில் பாதிக்கப்பட்ட 23 பேர் கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இதையடுத்தே மருத்துவத் துறையினரால் மேற்படி ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. (ம)




# உங்கள் அலுவலகத்துக்கு வந்தோரிடம் சொல்லுங்கள்

## மஹிந்தவுக்கு சங்கா 'டோஸ்'

கொழும்பு, மே 10

காலிமுகத்திடலில் நேற்று ஏற்பட்ட கலவரத்தை அடுத்து, வன்முறைகள் வேண்டாம் என்று பிரதமர் மஹிந்த வலியுறுத்திய நிலையில், 'இதை உங்களின் ஆதரவாளர்களிடம் சொல்லுங்கள்' என்று பதிலடி கொடுத்துள்ளார் இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் ஜாம்பவான் சங்கக்கார.

சங்கா வெளியிட்டுள்ள ருவிற்றில் உள்ளதாவது:

இந்த வன்முறை உங்களின் ஆதரவாளர்களால்தான் தோற்றுவிக்கப்பட்டது. உங்கள் அலுவலகத்துக்கு வந்த பின்னர் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்ற இடத்துக்குச் சென்று அங்கு அடாவடியில் ஈடுபட்டவர்களிடம் இதைப் போய் சொல்லுங்கள்- என்றுள்ளது. (ம)

# ராஜபக்சக்கள் யுகம் விரைவில் முடிவுக்கு

## சனத் ஆவேசம்

கொழும்பு, மே 10

ராஜபக்சக்களின் யுகம் இத்துடன் நிறைவுக்கு வரும் என்று இலங்கைக் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் சனத் ஜயசூரிய தெரிவித்தார்.

நேற்றைய கலவரம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கோத்தா கோ கம, மைனா கோ கம ஆகிய இடங்களில் அமைதியான முறையில் மேற்கொள்ளப்பட்ட போராட்டத்தின் மீது குண்டர்கள் களமிறக்கப்பட்டுத் தாக்கப்படுவார்கள் என நான் ஒருபோதும் நினைக்கவில்லை. போராட்டக்காரர்கள் மக்களுக்காகவே போராடுகிறார்கள்.

மாறாக ஊழல் அரசியல்வாதிகளைப் பாதுகாக்க அவர்கள் போராடவில்லை என்பதைப் பொலிஸார் நினைவில் கொள்ள வேண்டும். ராஜபக்கசக்களின் யுகம் இத்தோடு முடிவுக்கு வரும் என்றார். (ம)

# மஹிந்த ராஜபக்ச பதவி விலகினால் நாட்டுக்கு அரசியல் நெருக்கடியாம்

## முன்னாள் அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு,மே 10

பிரதமர் மஹிந்த ராஜபக்ச பதவி விலகினால் நாட்டில் அரசியல் நெருக்கடி ஏற்படும் என்று முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

பிரதமரைப் பதவி விலக வேண்டாம் என்று தெரிவித்து பிரதமரின் ஆதரவாளர்கள் அலரிமாளிகைக்கு முன் ஒன்று திரண்டபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

போராட்டத்துக்குத் தயாராகுங்கள். வெற்றியா?, தோல்வியா? என்பதைத் தீர்மானித்துக்கொள் ளலாம் என்றும் பொதுஜன பெரமுன கட்சியின் ஆதரவாளர்களுக்கு . ஜோன்ஸ்டன் பெர்ணாண்டோ அழைப்பு விடுத்தார். (க-இ)

# கேவலம்

## மஹேல கண்டனம்

கொழும்பு, மே 10

அரச எதிர்ப்பாளர்கள் மீது காடையர்களால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் வெட்கக்கேடானது என்று தெரிவித்தார் இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரான மஹேல.

இந்தச் சம்பவம் அருவருப்பானது என்பதுடன் திட்டமிட்ட ஒன்று. அமைதியாகப் போராடுபவர்களைத் தாக்கும் ஆளும் அரசாங்க ஆதரவுக் குண்டர்களின் கேவலமான செயற்பாட்டைக் கண்டிக்கின்றேன் - என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பிக்கையில்லாப் பிரேரணைகள் சபையில் அடுத்த வாரம் விவாதம்

## கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இணக்கம்

கொழும்பு, மே 10

**ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசாங்கத்துக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையை நாடாளுமன்ற ஒழுங்குப் புத்தகத்தில் உள்ளடக்குவதற்கு கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில், நாடாளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பான குழு நேற்றுக் கூடியது. கட்சித் தலைவர்களும், பிரதிநிதிகளும் இதில் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது ஜனாதிபதிக்கு எதிராகவும், பிரதமர் மஹிந்த ராஜபக்ச உள்ளடங்கலான அரசாங்கத்துக்கு எதிராகவும் முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைகளை விவாதத்துக்கு எடுப்பது குறித்து கலந்துரையாடப்பட்டது.

அவ்வேளையிலேயே இவ்விரு பிரேரணைகளையும் நாடாளுமன்ற ஒழுங்குப் புத்தகத்தில் உள்ளடக்குவதற்கு சபாநாயகர் இணக்கம் தெரிவித்துள்ளார்.

எனினும், ஜனாதிபதிக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையில் சிறு திருத்தம் செய்யப்படும் என சபாநாயகர் குறிப்பிட்டுள்ளார். 'நம்பிக்கையில்லாப் பிரேரணை' என்பதற்குப் பதிலாக, அவரின் நடவடிக்கையில் திருப்தி இல்லை என்பது போன்ற வசனமொன்று உள்ளடக்கப்படவுள்ளது. பிரேரணைகள் நாடாளுமன்ற ஒழுங்குப் புத்தகத்தில் உள்ளடக்கப்பட்ட பின்னர், நாடாளுமன்ற ஒழுங்குப் புத்தகம் அச்சிடப்படும். எம்.பிக்களுக்கும் பகிரப்படும். அதன் பின்னர் விவாதம் நடத்தப்பட வேண்டும். விவாதம் நடத்துவதற்கான திகதியை சபாநாயகர் தலைமையிலான நாடாளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பான குழுவே தீர்மானிக்க வேண்டும்.

அந்தவகையில் நாளை புதன்கிழமை கட்சித் தலைவர்கள் கூட்டம் மீண்டும் இடம்பெறவுள்ளது. இதன்போது எந்தப் பிரேரணையை முதலில் எடுப்பது என்பது சம்பந்தமாக தீர்மானிக்கப்படும். நாடாளுமன்றம் 17ஆம் திகதி கூடவுள்ளது. அவ்வாரத்தில் பிரேரணை விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும். பிரதமர் பதவி விலகினால் அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை வலுவிழக்கும். ஆனால் ஜனாதிபதிக்கு எதிரான பிரேரணையை முன்னெடுக்கலாம் - என்றார். (க-44)

# மஹிந்த தேசப்பிரிய இன்று களமிறங்குவார்

கொழும்பு,மே 10

காலிமுகத்திடலில் முன்னாள் தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய பெரும் போராட்டமொன்றை மேற்கொள்வார் என்று கருதப்படுகின்றது.

காலிமுகத்திடலில் அமைக்கப்பட்டுள்ள 'கோத்தா கோ கம'வில் உள்ளவர்கள் மீது இன்று (நேற்று) தாக்குதல் ஏதும் நடத்தப்பட்டால், நாளை (இன்று) அந்த இடத்துக்கு நான் வருவேன் என்று அவர் தனது முகநூலில் பதிவிட்டுள்ளார். இதனாலேயே மஹிந்த தேசப்பிரிய அரசாங்கத்துக்கு எதிராக இன்று போராட்டமொன்றை மேற்கொள்வார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (க-இ)

# சட்டத்தரணிகள் சங்கத்துடனான பேச்சு வெற்றி!

## மைத்திரிபால தெரிவிப்பு

கொழும்பு, மே 10

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளுக்கு தீர்வு காண்பதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளுக்காக அரசமைப்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்கள் தொடர்பில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்துடன் கலந்துரையாடப்பட்டுள்ளது என்று சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்துக்கும் இடையே இடம்பெற்ற சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்துடனான கலந்துரையாடல் வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளது எனவும் மைத்திரிபால சிறிசேன இதன்போது தெரிவித்தார். (எ-இ)

# ஜனாதிபதியின் பதிலிலேயே எங்கள் முடிவு இருக்கிறது!

## ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு



நாட்டிலுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு முன்வைக்கப்பட்டுள்ள யோசனைகளுக்கு ஜனாதிபதி எவ்வாறு பதிலளிக்கின்றார் என்பதை அடிப்படையாகக் கொண்டே எம்மால் தீர்க்கமானதொரு முடிவுக்கு வரமுடியும் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்துடன் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

எதிர்க்கட்சித் தலைவருக்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளமை இதற்கு முன்னரே எடுக்கப்பட்டிருக்கவேண்டிய தீர்மானமாகும். தற்போது மக்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகள் தீவிரமடைந்துள்ள நிலையில் மிகவும் காலதாமதமாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. அரச தரப்பினருடன் பேச்சுக்களை முன்னெடுப்பதற்குத் தயாராக உள்ளோம்-என்றார். (எ-இ)

# வன்முறையைத் தூண்டும் நபர்கள் உடன் கைதாவர்

## அரசாங்கம் எச்சரிக்கை

கொழும்பு, மே 10

பொதுமக்களின் இயல்பு வாழ்க்கைக்கு இடையூறு ஏற்படுத்தும் அல்லது வன்முறைப் போராட்டங்களில் ஈடுபடும் நபர்கள் கைது செய்யப்படுவார்கள் என்று அரசாங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவால் பிறப்பிக்கப்பட்ட அவசரகாலச் சட்டத்தின் கீழ் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று பொதுப்பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் ஜகத் அல்விஸ் தெரிவித்துள்ளார்.

அண்மையில் நாடாளுமன்ற வளாகத்தின் அருகில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டங்கள் அவசரகாலச் சட்டங்களைப் பயன்படுத்தியே கட்டுப்படுத்தப்பட்டன என்றும் அவர் தெரிவித்தார். (எ-இ)




**கொழும்பில கலவரம் தொடங்கின கொஞ்ச நேரத்திலேயே எல்லா இடமும் ஊரடங்குச் சட்டம் எண்டு அரசாங்கம் அறிவிச்சிட்டுது. இப்ப முந்தினமாதிரி இல்லைத்தானே. எல்லா நியூஸூம் சனத்துக்கு சூட்டோட சூடா தெரிஞ்சிடும். அதால ஊரடங்குச் சட்டம் எண்டு தகவல் வந்தவுடனேயே, எல்லா டிப்பார்ட் மெண்டுகளிலையும் வேலை செய்யிற அரசாங்க உத்தியோகத்தர்மார் வீட்டை போக அந்தரப்பட்டிச்சினம். ஏனெண்டால் கனபேர் பஸ்ஸை நம்பித்தான் ஒப்பீஸூக்கு வந்துபோறவை. முந்தி மோட்டார் சைக்கிளில வந்தவைகூட, இப்ப பெற்றோல் விலை, தட்டுப்பாட்டால பஸ்ஸூக்கு மாறிட்டினம். உடனடியா அமுலுக்கு வாற மாதிரி ஊரடங்கு போட்டதால பஸ் ஓடுமா? இல்லையா? எண்டு தெரியாத நிலைமை. ஊரடங்கு நாலைஞ்சு நாள் நீடிச்சால், வீட்டுக்குத் தேவையான சாமான்களை வாங்கிப் போடோணும். அதைவிட வெளிமாவட்டத்தில வேலை எண்டால், அடுத்த நேரச் சாப்பாட்டை எங்க எடுக்கிறது எண்டு ஒழுங்கு பண்ணோணும். இப்பிடி ஒவ்வொருத்தருக்கும் ஒவ்வொரு பிரச்சினை. அதைவிட, அரசாங்கம் ஊரடங்கு எண்டு அறிவிச்சால், எல்லாரும் வீடுகளுக்க முடங்க வேணும். அதுதானே சட்டம்?**

**ஆனால் எங்கட வடக்கு மாகாணத்தில அரசாங்கம் ஊரடங்குச் சட்டம் போட்டும், கன ஒப்பீஸூகளில "வழமையா உங்கட டியூட்டி முடியிற நேரத்துக்குத்தான் போகலாம்" எண்டு ஓர்டர் போடுப்பட்டு இருக்கு. குறிப்பா கன பிரதேச செயலகங்களில இப்பிடிச் சொன்னதால, போகவும் முடியாமல், நிம்மதியா ஒப்பீஸில நிக்கவும் முடியாமல் கன உத்தியோகத்தர் மார் (அதிலையும் கூடுதலாப் பெண்கள்) அந்தரிச்சுப் போட்டினம். இப்பிடி அரசாங்கம் போட்ட ஊரடங்குச் சட்டத்தைகூட மதிக்காமல், இவ்வளவு விசுவாசமா வேலை செய்யச் சொல்லுற மேலதிகாரிகளை நினைக்க அப்பிடியே புல்லரிக்குது. சிலவேளை அந்த ஒப்பீஸ் எரிஞ்சு கொண்டிருந்தால் கூட - ஆரும் வெளியில ஓடக்கூடாது. டியூட்டி ரைம் முடியத்தான் வெளியில போகலாம் - எண்டும் சொல்லக்கூடியது கடமைக்கண்மணிகள்.**

**ஒரு அசாதாரண நிலையில இன்னொரு சக மனிசரின்ர பிரச்சினைகளைக் கூட அறியமுடியாதவையோ. இப்பிடி ஊரடங்கு பாக்காமல் வேலை செய்து சனங்களின்ர பிரச்சினையைத் தீர்க்கப்போயினம்?**

+++

**இதுவும் எங்கட அரச அதிகாரிகள் சிலரின்ர வேலை விசுவாசம் பற்றின விசயம்தான். அரசாங்கத்துக்கு எதிர்ப்புத் தெரிவிச்சு, இண்டைக்குத் தொடக்கம் இலங்கையில உள்ள எல்லா எஸ்.எல்.ஏ.எஸ் அதிகாரிமார் பணிப்புறக்கணிப்பில ஈடுபடப் போயினம். அதால இனி நிர்வாக மட்டத்தில கனக்க வேலையள் அப்பிடியே அந்தரத்தில நிக்கப்போகுது. இப்பிடிப்பட்ட நிலைமையில, ஒரேயொரு மாவட்டச் செயலாளர் மட்டும், "அப்பிடியெல்லாம் வேலைக்கு வராமல் இருக்க ஏலாது. கட்டாயம் எல்லாரும் வேலைக்கு வரத்தான் வேணும்'' எண்டு அவைக்கு கட்டளை போட்டிருக்கிறாராம். அப்பிடி கடமையே கண்ணாக இந்த வாக்கைச் சொன்னவர் ஆரெண்டு நினைக்கிறியள்? சாட்சாத் யாழ்ப்பாணத்துக் கச்சேரிப் பெரியவர்தான்.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்க்குற்றங்களுக்கு புடினே பொறுப்பு

## கனடாப் பிரதமர் தெரிவிப்பு



கீவ், மே 10
உக்ரைனில் இடம்பெற்றுள்ள கொடூரமான போர்க் குற்றங்களுக்கு விளாடிமிர் புடினே பொறுப்புக்கூறவேண்டும் என கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.
உக்ரைன் - ரஷ்யா போரால் அழிவடைந்த உக்ரைனுக்கு நேற்றுமுன்தினம் கனடாப் பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ திடீர்ப் பயணம் ஒன்றை மேற்கொண் டார்.
அங்கு போரால் அழிக்கப்பட்ட நகரமான இர்பினை பார்வையிட்டார்.
அதன்பின் செய்தியாளர் சந்திப்பில் ஜஸ்டின் கருத்துத் தெரிவிக்கையில்,
உக்ரைனில் அழிக்கப்பட்ட இர்பின் நகரை பார்வையிட்டேன்.
ரஷ்யாவின் சட்டவிரோதப் போரின் கொடூரத்தை நான் நேரடியாகக் கண்டேன். கொடூரமான போர்க் குற்றங்களுக்கு விளாடிமிர் புடின்தான் பொறுப்பு என்பது தெளிவாகிறது.
உக்ரைனுக்கு எமது தொடர்ச்சியான ஒத்துழைப்பு கிடைக்கப்பெறும் என்று அவர் தெரிவித்தார். (ச-இ)





### பூர்வீக வீடும்....
டுள்ளது.
நினைவுத் தூபிகளை நிர்மாணிப்பதற்கு சுமார் 33.9 மில்லியன் ரூபா பொது நிதி முறைக்கேடாக பயன்படுத்தப்பட்டதாக வழக்கு தொடரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-இ)

### அலரிமாளிகைக்குள்...
பிரதமர் பதவியிலிருந்து மஹிந்த ராஜபக்ச விலகிய பின்னரும் அவர் அலரிமாளிகையிலிருந்து வெளியேறவில்லை என வெளியான தகவலையடுத்து, நேற்று முன்னிரவு அந்தப் பகுதி போராட்டக்காரர்களால் சுற்றி வளைக்கப்பட்டது.
அங்கு திரண்ட போராட்டக்காரர்கள் அலரிமாளிகைக்குள் அத்துமீறி நுழைய முயன்றதால் பெரும் பதற்றமான நிலைமை ஏற்பட்டது.
போராட்டக்காரர்கள் ஒரு கட்டத்தில் வாயில் கதவுகளை உடைத்து உள்ளே சென்று அங்கிருந்த வாகனத்துக்கு தீ வைத்தனர். அத்துடன் சிசிரிவி கமராக்களையும் உடைத்தனர். இதனையடுத்து பொலிஸார் ஆர்ப்பாட்டக்காரர்களை கலைக்க தண்ணீர்த்தாரை பிரயோகமும், கண்ணீர் புகைக்குண்டு வீச்சும் மேற்கொண்டனர். ஆனாலும் போராட்டக்காரர்கள் மீண்டும் இரவு 10 மணியளவில் மீண்டும் நுழைய முற்பட்டபோது கண்ணீர் புகைக்குண்டு வீச்சு முன்னெடுக்கப்பட்டது. போராட்டக்காரர்கள் தொடர்ந்தும் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு அலரிமாளிகைக்குள் பிரவேசிக்க முயன்றனர். இதனையடுத்து ஆகாயத்தை நோக்கி பொலிஸார் இருமுறை துப்பாக்கிச் சூடு நடத்தினர்.
இந்தச் செய்தி அச்சுக்குப் போகும் வரையில் அங்கு போராட்டக்காரர்கள் நிலைகொண்டுள்ளதுடன் பதற்றமான சூழல் நிலவிவருகின்றது. (அ-ஒ-5)

### யோசித...
மஹிந்த ராஜபக்சவின் இரண்டாவது

புதல்வர் யோசித ராஜபக்ச மற்றும் அவரது மனைவி ஆகியோர் நேற்றுக் காலை கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையம் ஊடாக சிங்கப்பூருக்கு தப்பிச் சென்றுள்ளனர். (அ-ஒ-இ)

### 2 ஆயிரம்...
அமைதிப் போராட்டத்தின் மீதான குண்டர்களின் தாக்குதலைக் கண்டித்து நாடு முழுவதும் பல்வேறு துறைகளைச் சேர்ந்த 2 ஆயிரம் தொழிற்சங்கங்கள் மறுஅறிவித்தல் வரையிலான பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தை அறிவித்துள்ளன.
கல்வி, மருத்துவம், போக்குவரத்து, தபால் உள்ளிட்ட பல்வேறு துறைசார்ந்த தொழிற்சங்கங்கள் நேற்று நள்ளிரவு முதல் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளதாக அறிவித்துள்ளன. அதேவேளை இலங்கை நிர்வாக சேவை அதிகாரிகளும் மறு அறிவித்தல் வரையில் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அறிவித்துள்ளனர்.
சுகாதாரத்துறையைப் பொறுத்தமட்டில், நாடளாவிய ரீதியிலுள்ள மருத்துவமனைகளில் அவசர சிகிச்சை தவிர்ந்த ஏனைய சேவைகள் நிறுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-இ)

### குண்டர்கள்...
கிராமங்கள் நேற்றுக் காலை நிர்மூலமாக்கப்பட்டிருந்தாலும் நேற்று மாலை அவை மீண்டெழுந்தன. ஊரடங்கு அறிவிப்பையும் புறந்தள்ளி சுமார் 50 ஆயிரம் பேர் வரையில் காலிமுகத்திடலில் நேற்று மாலை திரண்டனர்.
அலரிமாளிகைக்கு முன்பாக மஹிந்த ராஜபக்சவுக்கு ஆதரவாகப் போராட்டத்தில் ஈடுபட்ட கும்பல், அங்கிருந்த மைனாகோகம கிராம[illegible] யது. பின்னர் [illegible] கோத்தாகோகம கிராமத்துக்குச் சென்று அதனையும் அடித்து துவம்சம் செய்தது டன் தீயிட்டும் எரித்தது.
இந்த நிலையில் கோத்தாகோகம கிராமம் சில மணி நேரத்தில் மீளமைக்கப்பட்டது. அத்துடன் நேற்று மாலை அங்கு சுமார் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் திரண்டு ஆதரவை தெரிவித்தனர். குறிப்பாக கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையும் அங்கு பிரசன்னமாகியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-இ)

### மஹிந்த...
தன்னை மிரட்டி பதவி விலக்க முடியாது என்றும், மக்கள் கோரிக்கைக்கு ஏற்பவே செயற்படுவேன் எனவும் அலரிமாளிகையில் அழைத்துவரப்பட்ட ஆதரவாளர்கள் முன்பாக உரையாற்றிய மஹிந்த ராஜபக்ச, ஆதரவாளர்கள் மீதான தாக்குதலின் பின்னர் பதவி விலகுவதாக அறிவித்தார். அவரது பதவி விலகல் தொடர்பான வர்த்தமானி நேற்று நள்ளிரவு வெளியானது.
அலரிமாளிகையில் மஹிந்தவின் கூட்டத்தை முடித்து வெளியேறிய ஆதரவாளர்கள், குண்டர்களாக மாறி அமைதி வழிப் போராட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்தினர். கோத்தாகோகம, மைனாகோகம என்பனவற்றை நிர்மூலமாக்கினர். சிறிது நேரத்தில் அவர்கள் மீது பதில் தாக்குதல்கள் நடத்தப்பட்டு நையப்புடைக்கப்பட்டதைத் தொடர்ந்து, பிரதமர் பதவிலியிருந்து விலகுவதாக மஹிந்த அறிவித்திருந்தார். (அ-ஒ-5)

### தெய்வம்...
தென்னிலங்கையில் மஹிந்த ராஜபக்சவுக்கு எதிராக நேற்றுக் கட்டவிழ்ந்த போராட்டங்கள் மற்றும் வன்முறைகள் தொடர்பில் தமிழ் மக்கள் சமூகவலைத் தளங்களில் பல்வேறு கருத்துக்களைப் பதிவிட்டுள்ளனர்.
2009ஆம் ஆண்டு மே மாதம் முள்ளிவாய்க்காலில் இதேபோன்ற நாள்களில் தமிழ் மக்கள் கொல்லப்பட்டமையையும் அதன்போது தென்னிலங்கையில் பாற்சோறு பொங்கி மஹிந்தவை சிங்கள மக்கள் கொண்டாடியமையையும் குறிப்பிட்டு அதேபோன்றதொரு மே மாதத்தில் மஹிந்த ராஜபக்சவை விரட்டியடித்து அவர் பதவி விலகியை பாற்சோறு பொங்கி சிங்கள மக்கள் கொண்டாடுவதையும், 'தெய்வம் நின்று கொல்லும்' என்று பதிவிட்டு வருகின்றனர். அத்துடன் 'கர்மா' இதுதான் என்றும் பதிவிடுகின்றனர். (அ-ஒ-5)

### [illegible]...
நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளுக்கான தீர்வை வலியுறுத்தி அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டமை மனிதாபிமான செயற்பாடல்ல. இதற்கு ஒத்துழைப்புக்களை வழங்கிய அரசியல்வாதிகள் தொடர்ந்தும் மக்கள் பிரதிநிதிகளாக செயற்பட பொருத்தமற்றவர்கள். வன்முறையைத் தூண்டி குறுகிய அரசியல் நோக்கத்துக்காக செயற்பட்ட அனைவரும் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் என்று நான்கு பிரதான பௌத்த பீடங்களும் தெரிவித்துள்ளன. (அ-ஒ-இ)

### குமாரவெல்கம...
ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம, மகும்புர அதிவேக நெடுஞ்சாலைக்கு அருகில் ஒரு குழுவினரால் நேற்று மாலை தாக்கப்பட்ட நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். அவரது வாகனம் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-இ)

### மஹிந்தவை...
முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்சவை கைது செய்ய வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது.
'இன்று இராஜினாமா செய்த மஹிந்த ராஜபக்ச, தாக்குதல் நடத்தியவர்களை ஏற்பாடு செய்து கொழும்புக்கு அழைத்து வந்த அனைவரையும் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும்' என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ருவிற்றரில் பதிவிட்டுள்ளார். (அ-ஒ-இ)

### சஜித்...
கோத்தாகோமவில் இடம்பெற்ற அசம்பாவிதங்களையடுத்து அங்கு நேற்றுச் சென்ற எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மீது இனந்தெரியாதோர் பொல்லுகளை வீசி தாக்குதல் நடத்தினர். உடனடியாக சஜித்தின் மெய்பாதுகாவலர்கள் அவரைச் சூழ்ந்து மனிதப் பாதுகாப்பு அரண் அமைத்து அங்கிருந்து பாதுகாப்பாக பின்நகர்த்தி வாகனத்தில் ஏற்றுவதற்கு முயன்றனர். ஆனாலும் தொடர்ந்தும் கல்லுகளாலும் கையில் கிடைத்த பொருள்களாலும் அங்கிருந்தவர்கள் தாக்குதல் நடத்தினர். வாகனத்தில் ஏறிச் செல்ல முற்படும்போது வாகனத்தின் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது.
இதேவேளை ஜே.வி.பி.யின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அனுர குமாரதிஸநாயக்க, கோத்தாகோமவில் சென்று நிலைமைகளை நேரில் ஆராய்ந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உச்சக்கட்ட அவதானமாக தமிழர்கள் இருக்கவேண்டும்

## விக்னேஸ்வரன் எம்.பி. எச்சரிக்கை



**கொழும்பு, மே 10**

**காலிமுகத்திடலில் நேற்று மேற்கொள்ளப்பட்ட கலவரங்கள் தொடர்பில் தமிழ்மக்கள் மிகவும் விழிப்பாக இருக்கவேண்டும். இல்லையேல் இவை யாவும் தமிழ்ப் பயங்கரவாதிகளின் சூழ்ச்சி என்று அரசாங்கம் தமிழர்கள் மேல் அல்லது முஸ்லிம்களின் மேல் பாரத்தைப் போட்டு விடும் என்று தெரிவித்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினரான க.வி.விக்னேஸ்வரன்.**

கொழும்பு காலிமுகத்திடலில் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் நடத்திய அப்பாவி மக்கள்மீது, குண்டர்கள் மேற்கொண்ட தாக்குதல் தொடர்பில் வெளியிட்டுள்ள அவரது கண்டன அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தமிழ்மக்கள்மீது முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையை நிகழ்த்தி, பல்வேறு ஆதாரங்களின் மத்தியிலும் தாம் எந்தவொரு படுகொலையிலும் ஈடுபடவில்லை என்று அரசாங்கம் இன்றுவரை எவ்வாறு வாதாடுகின்றதோ, அதேபோன்றே காலிமுகத்திடல் வன்முறைச் சம்பவத்துக்கும் (பல்வேறு காணொலி ஆதாரங்கள் இருக்கின்ற போதிலும்) வாதாடும்.

இந்தச் சம்பவத்துக்கு அரசாங்கமே முழுப்பொறுப்பையும் ஏற்கவேண்டும். அரசாங்கத்துக்கு சார்பாக அலரிமாளிகையில் கூடிய குண்டர்கள், காலிமுகத்திடலில் கடந்த 30 நாள்களாகப் போராட்டம் நடத்திய அப்பாவி மக்கள் மீது தாக்குதல் நடத்திய சம்பவம், தமிழ்மக்கள் மீது கடந்த 65 வருடங்களாக மாறிமாறி ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் மேற்கொண்ட பயங்கரவாதத்தை நினைவுபடுத்துகின்றன.

தமது உரிமைகளுக்கு எதிராக சாத்வீக வழியில் போராட்டம் மேற்கொண்ட தமிழ் மக்கள் மீது படையினரை தொடர்ந்து ஏவி வந்த அரசாங்கங்கள் வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டிருந்தன.

இதுவே பின்னர் ஆயுதப் போராட்டத்துக்கு தமிழ் மக்களைத் தள்ளியது.

அதேபோன்று உணவு, எரிபொருள், மருந்துப்பொருள்கள் ஆகியவற்றுக்கான தமது உரிமைகளை வலியுறுத்தி அமைதியான வழியில் போராட்டம் நடத்தும் அப்பாவி மக்களின் மீது குண்டர்களை ஏவியும், படையினரின் உதவியுடனும் அரசாங்கம் மேற்கொண்ட வன்முறையானது மேலும் வன்முறைகளைத் தூண்டும் ஒரு செயற்பாடாகவே அமைகின்றது.

ஆகவே, இந்தச் சந்தர்ப்பத்தில் தமிழ் மக்கள் தூரவிலகி நின்று மிகவும் அவதானமாக இருக்க வேண்டும்.

அவசரகாலச் சட்டம், ஊரடங்குச் சட்டம் போன்றவற்றைத் திடீரென்று கொண்டு வந்தது இவ்வாறு மக்களை அடித்துத் துன்புறுத்தி இராணுவ அரசாங்கம் ஒன்றைக் கொண்டு வரவோ என்ற சந்தேகம் எழுகின்றது.


தமிழ் மக்களை எவ்வாறு பயங்கரவாதிகள் என்று சித்திரித்து அவர்கள் மீது வன்முறையை ஏவிவிட்டார்களோ அதேபோன்று சிங்கள மக்களுக்கும் எதிராகப் பயங்கரவாதிகள், தீவிரவாதிகள் என்று ஏதேனும் ஒரு சொல்லைப் பாவித்து வன்முறை அரசாங்கம் ஒன்றை நிறுவ நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்று சந்தேகப்படுகின்றேன்.

ஆகவே தமிழ் மக்கள் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும். இல்லையேல் இவை யாவும் தமிழ்ப் பயங்கரவாதிகளின் சூழ்ச்சி என்று அரசாங்கம் தமிழர்கள் மேல் அல்லது முஸ்லிம்கள்மீது மேல் பாரத்தைப் போட்டு விடும்-என்றுள்ளது.

(க-இ)

# தாயக மண்ணில் அரங்கேறிய இனப்படுகொலையை மறக்கவும் மாட்டோம்: மன்னிக்கவும் மாட்டோம்

இறுதிக்கட்டப்போரின் போது 2009ஆம் ஆண்டு மே மாதத்தில் இதே நாளில் உதயனில் வெளியான செய்திகள் நினைவூட்டலுக்காக.




# கடவுச்சீட்டு விநியோகம் மீள ஆரம்பம்

கொழும்பு,மே 10

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் கணினிக்கட்டமைப்பில் ஏற்பட்ட கோளாறு காரணமாக நிறுத்தப்பட்ட கடவுச்சீட்டு விநியோகம், சாதாரண சேவையின் கீழ் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எனினும், ஒருநாள் சேவை இடம்பெறாது என்று திணைக்களம் அறிவித்துள்ளது.

அதற்கமைவாக கடந்த 5 ஆம் திகதி முதல் சாதாரண சேவையின் கீழ் விண்ணப்பங்களைக் கையளிப்பதற்காக திணைக்களத்துக்குச் சென்று, இலக்கம் அல்லது திகதி முத்திரையைப் பெற்றுக்கொண்டவர்களின் விண்ணப்பங்கள் மாத்திரமே ஏற்கப்படும். இன்று முதல் விண்ணப்பங்களைக் கையளிப்பதற்கு முற்கூட்டியே நேரத்தை ஒதுக்கிக் கொள்வது அவசியம். www.immigration.gov.lk என்ற இணையத்தள முகவரிக்குப் பிரவேசித்து அல்லது 070 71 01 060 என்ற தொலைபேசி இலக்கத்துக்குத் தொடர்புகொண்டு, அதற்கான காலம் மற்றும் நேரத்தை ஒதுக்கிகொள்ளமுடியும் என்றும் திணைக்களம் அறிவித்துள்ளது. (க-இ)



**கடந்த வருடம்**

# ரயில்வே திணைக்களத்துக்கு 10.3 பில்லியன் ரூபா இழப்பு!

கொழும்பு, மே 10

மத்திய வங்கியின் வருடாந்த அறிக்கையின்படி, 2021ஆம் ஆண்டில் இலங்கை ரயில்வேத் திணைக்களத்துக்கு 10.3 பில்லியன் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது. பயணிகள் போக்குவரத்தின் மூலம் கிடைக்கப்பெற்ற வருமானம் 53 வீதத்தால் குறைவடைந்த ... இதற்குக் காரணம் என்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஏப்ரல் மற்றும் ஓகஸ்ட் மாதங்களில் ஏற்பட்ட கொரோனாத் தொற்றாலும் வருமானம் குறைவடைந்துள்ளது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதேவேளை 2020ஆம் ஆண்டில் இலங்கை ரயில்வேத் திணைக்களம் 10.1 பில்லியன் ரூபா இழப்பைப் பதிவு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-இ)

# குழு மோதலில் ஒருவர் கொலை

கொழும்பு, மே 10

இரு தரப்பினருக்கு இடையிலான மோதலில் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் பயாகல மில்லகஸ் உடமுல்லப் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

அதேபகுதியைச் சேர்ந்த 48 வயதுடைய சன்ன சபரமாது என்கிற நபரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் இடைவிலகல் பெருமளவு அதிகரிப்பு!

கொழும்பு, மே 10

**பாடசாலைகளில் இருந்து மாணவர்கள் இடைவிலகுவது பெருமளவு அதிகரித்துள்ளது என்று இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.**

மத்திய வங்கி வெளியிட்டுள்ள தரவுகளின் அடிப்படையில் கடந்த வருடம் மட்டும் மாணவர்களின் இடைவிலகல் எண்ணிக்கை 33 ஆயிரத்து 529ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன் நாடளாவிய ரீதியில் அரச பாடசாலைகளில் சேவையாற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கையிலும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

2020ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் கடந்த ஆண்டு 994 ஆசிரியர்கள் துறையை விட்டு நீங்கிச் சென்றுள்ளனர். (ம)

## கருங்காலி மரங்களை வெட்டியோர் கைது

கிளிநொச்சி, மே 10

கருங்காலி மரங்களை வெட்டிய குற்றச்சாட்டில் இருவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இராமநாதபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்மடு நகர் பகுதியிலுள்ள காட்டுக்குள் அனுமதியின்றி நுழைந்த இருவர் பத்துக்கும் மேற்பட்ட கருங்காலி மரங்களை வெட்டியுள்ளனர். இதன்போதே குறித்த இருவரும் இராமநாதபுரம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். (ம-14-113)

## பரீட்சை விண்ணப்பங்கள் இணையத்தில் தரவேற்றம்

யாழ்ப்பாணம், மே 10

வடமாகாண பொதுச்சேவை ஆணைக்குழு அலுவலகத்தால் நடத்தப்படும் வினைத்திறமை காண் தடைப்பரீட்சைகளின் சுற்றறிக்கைகள் எதிர்வரும் காலங்களில் இணையத்தளத்தில் தரவேற்றம் செய்யப்படும் என்று வடக்கு மாகாண பொதுச்சேவைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதற்கமைய பரீட்சை விண்ணப்பங்கள் www.np.gov.lk என்ற இணையத்தளத்தில் தரவேற்றம் செய்யப்படும். அத்துடன் பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்களை குறித்த இணையத்தளத்தில் தரவிறக்கம் செய்து திணைக்களத் தலைவரின் பரிந்துரையுடன் விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும் என்று ஆணைக்குழுவின் செயலாளர் அறிவித்துள்ளார். (ம-14-9)



## இடியன் துப்பாக்கியுடன் ஒருவர் கைதானார்!

கிளிநொச்சி, மே 10

இராமநாதபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாயனூர் பகுதியில் இடியன் துப்பாக்கியுடன் ஒருவர் நேற்று முன்தினம் கைதானார்.

இராமநாதபுரம் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய மேற்கொண்ட தேடுதலிலேயே, வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் இடியன் துப்பாக்கியை மீட்டதுடன் சந்தேகநபர் ஒருவரையும் பொலிஸார் கைது செய்தனர். (ம-14-113)


## முக்கிய அறிவித்தல்

ஒட்டகப்புலம், வயாவிளான் பகுதியில் அண்மையில் உயர் பாதுகாப்பு வலயத்திலிருந்து விடுவிக்கப்பட்ட காணிகளை காணியின் உரிமையாளர்களுக்கு தெரியாமல் மோசடியாக ஆவணங்களைத் தயாரித்து ஒரு கும்பல் தமது காணிகள் போல விற்று வருகின்றனர். இது தொடர்பாக அண்மையில் தெல்லிப்பளை பிரதேச செயலகம் தமது முகநூலில் ஒரு விழிப்புணர்வுச் செய்தியை வெளியிட்டிருந்தது. தயவு செய்து ஒட்டகப்புலம் பகுதியில் காணிகளை வாங்க விரும்புபவர்கள் விழிப்பாக இருக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
காணி விவகாரக் குழு
ஒட்டகப்புலம், வயாவிளான்.
மின்னஞ்சல்: lacoddahappulam@gmail.com



## மரண அறிவித்தல்



### திருமதி பூரணலட்சுமி இரத்தினராசா

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், துன்னாலையை வதிவிடமாகவும், உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பூரணலட்சுமி இரத்தினராசா அவர்கள் நேற்று (09.05.2022) திங்கட்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினராசா அவர்களின் மனைவியும், காலஞ்சென்ற ராமசாமி அன்னமுத்து அவர்களின் பாசமிகு புதல்வியும், பிள்ளைகளான சசிகலாதேவி, சந்திரலீலா, சாரதலீலா (இலங்கை வங்கி) ஜெயகௌரி, சிவசரஸ்வதி, மேகலா ( காலஞ்சென்ற), தவக்குமரன், பாமா அவர்களின் பாசமிகு தாயாரும் மற்றும் மருமகன்மார், அமுதலிங்கம், சித்திவிநாயகன், சிவபாலன், சிறிரட்ணம், சந்திரசேகரம், மருமகள் அறிவரசி மற்றும் சிவாரூபன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் பேரப்பிள்ளைகளான கஜீவன், கௌதமன், கோபிகன், உமையவன், பிரணவன், கஜானன், ஆதீஸ், லக்ஷிகா, லக்ஷன், ஹரீசன், ராஜீசன், முல்லை, முகிலன், தியா, ஆதித்தியன் அவர்களின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் சகல கிரிகைகளும் நடைபெற்று பி.ப 4.00 மணி அளவில் இன்று .(10.05.2022) தகனக் கிரியைகளுக்காக இருளன் மயானத்திற்கு கொண்டு செல்லப்படவுள்ளது.

தொடர்புக்கு,
மகன்- தவக்குமரன் (Canada) +0114168233748
மருமகள்- அறிவரசி (Canada) +0116474702823

தகவல்:
குடும்பத்தினர்.



## மரண அறிவித்தல்

தோற்றம் 23 . 03 . 1943



மறைவு 09 . 05 . 2022

### திருமதி நாகராசா செல்வமணி

கரவெட்டி தெற்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகராசா செல்வமணி அவர்கள் நேற்று (09.05.2022) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லான்-காந்திமதி தம்பதியரின் மூத்த மகளும், காலஞ்சென்ற கனகம்மா, செல்லப்பாக்கியம், செல்வம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற ஐயன் நாகராசாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற பாஸ்கரன் மற்றும் பாலநந்தினி (சுவிஸ்), பகீரதன் (அச்சுவேலி), பார்த்தீபன் (அச்சுவேலி), பாலசௌகல்யா (கரவெட்டி) ஆகியோரின் அன்புத் தாயாரும், குலசோதி, றாகினி, பாமா, சந்திரகுமார் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், கௌதமி, கௌதமன், கிருஷானி, துவாரகன், நிருஷிகா, திலக்ஷன், சலக்ஷிகன், மகிஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.05.2022) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 11.00 மணியளவில் கரவெட்டி சோனப்பு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கரவெட்டி தெற்கு,
கரவெட்டி.

தகவல்: குடும்பத்தினர்.
076 237 7731
074 267 0695


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டுப்பாட்டை இழந்த பவுஸர் மின்கம்பத்துடன் மோதி விபத்து



யாழ். மே 10

வேகக் கட்டுப்பாட்டை இழந்த தண்ணீர் பவுஸர் மின்கம்பத்துடன் மோதி விபத்து ஏற்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் தெல்லிப்பழை - பண்டத்தரிப்பு வீதியில் நேற்று இடம்பெற்றது.

பொன்னாலையில் உள்ள ஐஸ் தொழிற்சாலைக்கு தண்ணீர் விநியோகம் செய்தபின் திரும்பிச் சென்றபோதே இந்த விபத்து ஏற்பட்டது. விபத்தில் பவுஸர் சாரதிக்கு சிறிய காயம் ஏற்பட்டது என்று தெரிவித்த இளவாலைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ம-14-27)

## உதவிக்கொடுப்பனவை பெற்றுக் கொள்ளுங்கள்

சாவகச்சேரி, மே 10

தென்மராட்சிப் பிரதேச செயலக சமூக சேவைகள் அலகால் பிரதேச பொதுசன மாதாந்த உதவிப் பணம் மற்றும் நோய்களுக்கான கொடுப்பனவுகள் பெறுவோருக்கான மே மாதக் கொடுப்பனவுகள் அந்தந்த அஞ்சல் அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் 18ஆம் திகதிக்கு முன்னர் கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(ம-14-9)

## கண்ணீர் அஞ்சலி



பிறப்பு 02 . 04 . 1945 — இறப்பு 08 . 05 . 2022

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் **செல்வி ஆரணி தவராசா** அவர்களின் அன்புத் தாயார்

### அமரர் தவராசா கமலராணி

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன். ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

**கல்விசாரா உத்தியோகத்தர்கள்**
**நலன்புரிச்சங்கம்**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.**

(CS 19657) 1/6

## University of Jaffna
## Vacancy - Post of Temporary Demonstrator – Faculty of Medicine

Applications are entertained from those who have passed the final examination of the MBBS degree obtained from the State Universities or UGC recognized foreign Universities. *(Research experience in the relevant field is preferable)*

Salary Scale :Rs 40,920.00 (Fixed)

Interested candidates with the required qualifications are requested to send scanned copies of relevant certificates along with their duly filled applications in the prescribed application format.

Application forms and other details are available in the Faculty of Medicine website:
**http://www.med.jfn.ac.lk/wp-content/uploads/2021/01/APPLICATION-Form.pdf**

Applications with scanned copies of the relevant and required certificates should be sent **on or before Monday, 23.05.2022** to the following email address: **fomvacancy@univ.jfn.ac.lk**

Prescribed application form downloaded from the website must accompany paid bank slip for the deposit of a sum of Rs.100.00 credited to the people's Bank Account No (Ref No): 970000090000387 in favor of Bursar, University of Jaffna.

The date of the selection interview for the above post will be notified to the eligible applicants via email.

Registrar
University of Jaffna. 09.05.2022

## அந்தியேட்டிக் கிரியை அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம் 21 . 11 . 1941 — மறைவு 13 . 04 . 2022

### திருமதி ஞானேஸ்வரி சிவராஜசிங்கம்

(ஓய்வுபெற்ற ஆசிரியை கிளி / பரந்தன் இந்து ம. வி )

மீசாலையை பிறப்பிடமாகவும் இல 73 குமரபுரம் பரந்தனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஞானேஸ்வரி சிவராஜசிங்கம் (ஓய்வுபெற்ற ஆசிரியை கிளி /பரந்தன் இந்து ம. வி) அவர்களின் 31ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி கிரியையும் நாளை (11.05.2022) புதன்கிழமை புனித தீர்த்தக்கரையிலும் 13.05.2022 வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

அன்னாரின் துயர் செய்தியை கேட்டு ஓடோடி வந்தும் அனைத்து வழிகளிலும் உதவிய உற்றார். உறவினர். நண்பர்கள். குமரபுர வாழ் மக்கள். அன்னாரின் உலக வாழ் மாணவர்கள். நண்பர்கள் அனைவருக்கும் இரு கரம் கூப்பி எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இந்த அழைப்பிதழை [illegible]
வருகைதருமாறு [illegible]

**73 குமரபுரம்,**
**பரந்தன்.**

**குடும்பத்தினர்**

## பெயர் மாற்றம்

துன்னாலை தெற்கு கட்டைவேலியில் வசிக்கும் **கதிரேசன் சிறீவேல்முருகன்** ஆகிய நான் எனது பெயரை **கதிரேசன் சிறீ** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **கதிரேசன் சிறீ** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை சோஷலிசக் குடியரசுக்கு அமைவாக உறுதிப் படுத்துகின்றேன்

(cs 4460) (2.6)

கதிரேசன் சிறீ

## கண்ணீர் அஞ்சலி



பிறப்பு 09 . 06 . 1931 — இறப்பு 10 . 04 . 2022

### அமரர் திரு. முருகேசு இராசையா

கல்வி தரும் ஆசிரியத் தொழில் புரிந்தீர் சிறப்பாய்
சிவகாமி அம்பாள் திருமணமண்டபத்தின் காப்பாளராய் இருந்து
எங்கள் மண்டபத்தின் வளர்ச்சிக்கு அரும்பணியாற்றியவரே!
ஓய்வுபெற்ற காலத்தில் எமது திருமண மண்டபத்திற்கு
அரும்பணியாற்றி கடந்த 10.04.2022 அன்று இவ்வுலகை
விட்டுப் பிரிந்த **அமரர் திரு. முருகேசு இராசையா**
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
**இணுவில் சிவகாமி அம்பாள்**
**திருமண மண்டபம்**

(cs 44541) (2.6)

## மரண அறிவித்தல்



பிறப்பு 10 . 09 . 1950 — இறப்பு 09 . 05 . 2022

### சின்னராஜா மகேந்திரராஜா

(மன்னார் வர்த்தகர் - கந்தையா ஸ்ரோர்ஸ்)

சைவப்பாடசாலை வீதி.கோண்டாவில் மேற்கு, கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னராஜா மகேந்திரராஜா நேற்று (09.05.2022) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னராஜா (கந்தையா ஸ்ரோஸ் - மன்னார்) சரஸ்வதிப்பிள்ளை அவர்களின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான ஓய்வுபெற்ற அதிபர் கிருஷ்ணபிள்ளை கனகம்மா அவர்களின் அன்பு மருமகனும் மீனலோஜனியின் அன்புக்கணவரும் கஜலக்ஷி (Civil Engineering in Open University) கீர்த்தனா (Management in Open University), மிரோஷன் (Moratuva Engineering(Civil)) ஆகியோரின் பாசமிகு தந்தையும், நிரோஜ்குமாரின் (Software Engineer) அன்பு மாமனாரும் மனோன்மணி, செல்வராணி (ஜேர்மனி), புனிதமலர், சிவனேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் அமரர்களான செல்வராசா, சிவதாசன், மகேந்திரன் மற்றும் சிவதாரணி ஆகியோரின் மைத்துனரும் பத்மலோஜனி, கமலலோஜனி, அமரர் வைகுந்தநாதன், நிமலலோஜனி, புஷ்பலோஜனி, செந்திநாதன், சிறிதரன், முரளிதரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (10.05.2022) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானதிற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சைவப்பாடசாலை வீதி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

தகவல்:
குடும்பத்தினர்
தொ.இல:- 0764986182

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர்

# சுப்பிரமணியம் மங்கையர்க்கரசி

அவர்களின்

## நீங்காத நினைவலைகள்

தோற்றம்
15 • 10 • 1947



மறைவு
12 • 04 • 2022

இந்து சமுத்திரத்தின் முத்தன்ன ஈழத்தில்
தெங்கு மலி தென்மராட்சி மண்ணில்
வனப்பு மிகு கச்சாய்ப்பதியில்
வெற்றிவேலு கண்மணி தம்பதியர்க்கு
திருமகளாய் வந்துதித்தார் மங்கையர்க்கரசி
கொடிகாமம் திருநாவுக்கரசு தேசிய கல்லூரியில்
கசடறக் கல்வி கற்று
சுப்பிரமணியத்தை வதுவை செய்தார்
சுற்றம் சூழலுடன் அன்பாகப் பழகி
அனைவரதும் நன்மதிப்பை பெற்றிருந்தார்
"நன்றே செய்க, அன்றே செய்க"
என்பதை தாரக மந்திரமாகக் கொண்டு
சமய சமூகப் பணியில் ஈடுபட்டார்
கட்டைபறித்தான் ஆலய அபிவிருத்திக்கு
பெருந் தொண்டுதான் புரிந்தார்
ஒட்டங்கேணிப் பிள்ளையார் ஆலயத்துடன் ஒன்றி
பொருளுதவி, நிதியுதவி பொற்புடனேதான் செய்தார்
கச்சாய் அம்மன் ஆலயத்தை அபிவிருத்தி செய்ய
முன்வந்தே பேருதவி செய்திட்டார் அங்கு
வைகாசி விசாகத்தன்று அன்னதானமும் செய்திடுவார்
புங்கடிப் பிள்ளையார் கோவில் எழுச்சியுற
ஆண்டு தோறும் பணி செய்தார்
தன் இறுதிக் காலத்தை எண்ணி
ஆத்தியடிப் பிள்ளையாருக்கும் பொன்னுதவி புரிந்தாரே
கொடிகாமம் முருகன் கோயில் புனரமைப்பிற்கு
மனமுவந்து பேருதவிதான் அளித்தார்
கோயில் பூசகர் குடியிருக்க பண உதவி நல்கினரே
"எம் மதமும் சம்மதமே" எனும் உயர்நோக்கில்
தன் இல்லருகிருந்த புனித சம்பேதுருவரிடன்
பேரன்பு கொண்டு என்னைக் காப்பாற்று என்பாரே
அக்கோவில் ஆனிப் பெருநாள் இறுதியன்று
அடியார்க்கு காலை உணவளிப்பார்
மதபேதமற்ற அவரின் அன்புள்ளம்
பிற மதத்தவரையும் கவர்ந்ததுவே
ஒட்டங்கேணி சனசமூக நிலையம் மீண்டும் மலர
காணியும் பணமும் மனமுவர்ந்துதான் அளித்தார்
கொடிகாமம் திருநாவுக்கரசு தேசிய கல்லூரிக்கு
அடிக்கும் மணியை அன்புடனே ஈந்திட்டார்
கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்ப பாடசாலை
வளர்ச்சியுற நிதியுதவிதான் புரிந்தார்
கண்டி வீதி கொடிகாமத்தில் சித்த ஆயுர்வேதமும்
பிரதேச சபைக் கட்டடமும் வண்ணமுற அமைத்திட
தூரநோக்கில் தன் காணியை அன்பளித்தார்
உறவினரில் அன்பு வைத்து
தன் காணிகளை பகிர்ந்தளித்தார்
சகோதரியாயிருந்து தன் வீட்டுப்பணி செய்த
நங்கைக்கும் வீடும் காணியும் உவந்தளித்தார்
அண்டை அயலவரின் சடங்குகளிலும்
இனிதே பங்குகொள்வார்
சமயப் பற்றும் சமூகப் பற்றும் மிக்க
மங்கையர் திலகம் தன் அகவை எழுபத்தைந்தில்
உறவுகள் கண்ணீர் மல்க இறைபதம் நல்கினாரே
"உறங்குவது போலும் சாக்காடு
உறங்கி விழிப்பதுபோலும் பிறப்பு"

ஓம் சாந்தி... ! சாந்தி... !! சாந்தி...!!!

**குறிப்பு:**
அமரர் சுப்பிரமணியம் மங்கையர்க்கரசியின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (11.05.2022) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறுவதால் அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**உங்கள் பிரிவால் துயருறும் : உறவினர்கள்**

(எ.35960) (2.6)

# 10 ஆம் ஆண்டு நினைவலைகள்

அமரர்

## சின்னத்தம்பி கந்தசாமி

(ஓய்வுபெற்ற கிராம அலுவலர்)



மண்ணில்
21.12.1937

விண்ணில்
30.04.2012

அன்புள்ள அப்பா........

வெளிச்சத்தில் நாங்கள் வாழ
விழிகளில் விளக்கு வைத்து
உடலை உரமாக்கி உதிரத்தை வியர்வைத்துளியாக்கி
கரத்தை சிறகாக்கி நதிபோல் நடந்தீர்கள்

எங்கள் ஆதவனின் ஒளியை இழந்து
அழகு வதனம் நிழல் படமாகி
பத்து ஆண்டுகள் உங்கள் நினைவைச் சுமந்துவாழ்கின்றோம்

காலமெல்லாம் துணையாக இருந்து
எம்மை ஆளும் அப்பா!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனிடம் கையேந்துகின்றோம் அப்பா!


முருக மூர்த்தி வீதி,
சங்கானை கிழக்கு.

(CS 864) (2.6)

என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும்
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

தோற்றம்
26 • 08 • 1930



மறைவு
07 • 05 • 2022

## திரு. வல்லிபுரம் நடராசா

(முன்னை நாள் கிராம சேவகர்)

நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிடமாகவும் தற்போது கனடாவில் வசித்து வந்தவருமாகிய திரு. வல்லிபுரம் நடராசா கடந்த (07.05.2022) சனிக்கிழமை அதிகாலை கனடாவில் இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - பொன்னம்மா தம்பதியரின் ஏக புதல்வனும், காலஞ்சென்றவர்களான இராமநாதர் - நாகமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற கண்மணியின் ஆருயிர் கணரும், காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம், இராசேந்திரம், பொன்னையா மற்றும் வைரவநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஜெகதீஸ்வரி, பரமேஸ்வரி ஆகியோரின் உடன்பிறவா சகோதரரும், விஜயலட்சுமி, சிவகுமாரன் (சிவா), தயானந்தி (தயா), வரதலட்சுமி (கலா) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற அருமை நாயகம் மற்றும் பங்கயச்செல்வி, காலஞ்சென்ற விநாயகமூர்த்தி (மூர்த்தி) மற்றும் கந்தசாமி (மோகன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், சர்மினி, நிலானி, தாட்சாயினி, நிரோசன், அனுசன், கீர்த்தனா, சகானா, ஆதீனா, இந்துஜா, தனுசா, சகன், சிரௌதி, கௌத்திரா, சௌத்திரி ஆகியோரின் அன்புப் பேரனும், ஆதிரன், தீபிகா, அக்ஷிகா, அஸ்வின், அர்சின் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் Chapel Ridge Funeral Home, Markham Ontario இல் எதிர்வரும் (14.05.2022) சனிக்கிழமை மாலை 6.00 மணியிலிருந்து 9.00 மணிவரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மறுதினம் (15.05.2022) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிமுதல் 8.30 மணிவரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு அன்று காலை 8.30 இல் இருந்து 12.00 மணிவரை இறுதிக்கிரியைகள் நடைபெற்று, பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:**

| | | |
|---|---|---|
| விஜயலட்சுமி | (விஜயம் | - 647 228 5989) |
| சிவகுமாரன் | (சிவா | - 416 227 9471) |
| தயானந்தி | (தயா | - 416 556 5721) |
| வரதலட்சுமி | (கலா | - 416 220 2388) |
| கந்தசாமி | (மோகன் | - 416 436 0282) |
| பங்கயற் செல்வி | (பங்கயம் | - 467 444 4712) |

தகவல்:
**குடும்பத்தினர்.**

(cs.19662) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குண்டர்களின் தாக்குதலை கண்டித்து வடக்கில் வீதிமறியல் போராட்டம்

யாழ்ப்பாணம், மே 10
தென்னிலங்கையில் அமைதி வழியில் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தை மஹிந்த ஆதரவு குண்டர்கள் தாக்கியமைக்கு எதிர்ப்புத்து தெரிவித்து வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் நேற்று மாலை கவன வீர்ப்புப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி வளாகத்தில் நேற்று மாலை முன்னெடுக்கப்பட்ட போராட்டம் ஏ - 9 வீதியில் இடம்பெற்றது.
வவுனியா பல்கலைக்கழக மாணவர்களால் பல்கலைக்கழகம் முன்பாக வீதியை மறித்துப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. வவுனியா - மடுகந்தப் பகுதியில் பொதுமக்களாலும் போராட்டம் நடத்தப்பட்டது.
இதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்தில் மாவட்ட மருத்துவமனை மருத்துவர்கள் கவனவீர்ப்புப் போராட்டத்தை மேற்கொண்டனர். மருத்துவமனை முன்பாக அவர்கள் கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

(ஒ-19-110-113)

## தென்னிலங்கையில்...

**அலரிமாளிகைக் கூட்டம்**

மஹிந்த ராஜபக்சவை பிரதமர் பதவியிலிருந்து விலகுமாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற அமைச்சர்களுக்கான கூட்டத்தில் கோரியிருந்தார். இதன் பின்னர் பிரதமர் பதவியை ஏற்கவருமாறு சஜித்தையும் அவர் கேட்டிருந்தார். இந்த நிலையில் மஹிந்த ராஜபக்ச பிரதமர் பதவியிலிருந்து நிர்ப்பந்தத்தின் அடிப்படையில் நேற்று மாலை இடம்பெறும் அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர் விலகுவார் என்று எதிர்வுகூறப்பட்டிருந்தது.

**உசுப்பேற்றல்**

ஆனால், மஹிந்த ராஜபக்ச ஆதரவு முன்னாள் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் என்று சுமார் ஆயிரம் பேர் வரையில் அலரிமாளிகையில் நேற்றுக் காலை கூடினர். இந்தக் கூட்டத்தில் உரையாற்றிய முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, காலிமுகத்திடலில் உள்ள கோத்தாகோகமவை துப்புரவு செய்ய வேண்டிய நேரம் வந்துவிட்டதாகவும், போருக்குத் தயாராகுமாறும் குறிப்பிட்டார்.

**ஆர்ப்பாட்டம்**

அலரிமாளிகை கூட்டம் முடிந்த பின்னர் அலரிமாளிகைக்கு முன்பாக நின்று, மஹிந்தவே பிரதமராக வேண்டும் என்றும், புலம்பெயர் தமிழ்ப் பிரிவினை வாதிகளின் கதைகளைக்கேட்டு அவரைப் பதவி விலக்கக் கூடாது என்றும் கூட்டத்தில் கலந்துகொண்டவர்கள் போராட்டம் நடத்தினர்.
அலரிமாளிகைக்கு முன்பாக 'மைனா கோகம' கிராமத்தில் அமைதிவழியில் அரசாங்கத்தை பதவி விலகக் கோரிய போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், மஹிந்த ஆதரவு ஆர்ப்பாட்டக்காரர்கள் திடீரென அதற்குள் புகுந்தனர். இரும்புக் கம்பிகள், பொல்லுகள், தடிகளுடன் தாக்குதலுக்கு திட்டமிட்டு தயாராக வந்தவர்கள் போன்று மைனா கோகமவை அடித்து நொருக்கியதுடன் அங்கிருந்தவர்களையும் விரட்டி விரட்டி தாக்கினர். பொலிஸார் தடுப்பதற்கு போதுமான நடவடிக்கை எடுக்கவில்லை.

**கோத்தாகோகமவும் அழிப்பு**

அங்கிருந்து காலி வீதி வழியாக கோத்தாகோகமவை நோக்கி குண்டர் குழு முன்னேறியது. காலிவீதியை பொலிஸார் மூடி தடைகளை ஏற்படுத்தினர். ஆனாலும் அதனை இலாவகமாக உடைத்துக் கொண்டு முன்னேறிய குண்டர் குழு கோத்தாகோகமவையும் நிர்மூலமாக்கியது. அங்கிருந்த பொருள்களுக்கு , குறிப்பாக நூலகத்துக்கும் தீ வைக்கப்பட்டது. இதனையடுத்து பொலிஸார் தண்ணீர்த்தாரைப் பிரயோகம் மேற்கொண்டனர்.

**இராணுவம் களமிறக்கம்**

நிலைமை கட்டுக்கடங்காமல் செல்லத் தொடங்கியதையடுத்து இராணுவம் அங்கு களமிறக்கப்பட்டது. இராணுவத் தளபதியும் நேரில் சென்று நிலைமைகளை ஆராய்ந்தார்.

**பதிலடி**

வன்முறைகளில் ஈடுபட்ட மஹிந்த ஆதரவு கும்பலுக்கு பதிலடி கொடுக்கும் வகையில், காலிமுகத்திடல் போராட்டக்காரர்களுக்கு ஆதரவானவர்கள் கொழும்பின் பல பகுதிகளிலிருந்தும் அங்கு திரண்டனர். பல்கலைக்கழக மாணவர்கள், பல்வேறு துறைகளில் தொழில்புரிவோர் என அனைவரும் சில நிமிடங்களில் அங்கு கூடினர். வன்முறையில் ஈடுபட்ட குண்டர் குழுவை தேடித் தேடி பதிலடியாகத் தாக்கியதுடன் அவர்களை மடக்கிப் பிடித்து மின்கம்பங்களில் கட்டினர். வாவிக்குள் தள்ளி சிறைப் பிடித்தனர்.தப்பியோட முற்பட்ட குண்டர் குழுக்களை தேடி வேட்டையாடிய ஆரம்பித்தனர் ஆர்ப்பாட்டக்காரர்கள்.
இந்தக் களேபரங்களால் காயமடைந்த 173 பேர் மருத்துவமனைகளில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.


**துப்பாக்கிச்சூடு - எம்.பி. சாவு**

இந்தச் சம்பவம் தலைநகர் கொழும்பைத்தாண்டியும் ஏனைய இடங்களிலும் பதற்றத்தை ஏற்படுத்தியது. குறிப்பாக மஹிந்த ஆதரவுக் கூட்டத்துக்கு காடையர்களை அழைத்துச்சென்ற முன்னாள் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள் மீதான கோபாவேசமாக மாறியது. அவர்களைத் தேடிச் சென்று வலிந்து தாக்குவதில் ம... மஹிந்தவின் ... கலந்து

# சிறைக்கைதிகளும் 'குண்டர்களாகினர்'

கொழும்பு, மே 10
காலிச் சிறைச்சாலைக் கைதிகள் சிலரும், அரசாங்கத்துக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் வன்முறையில் ஈடுபட்ட குண்டர் குழுவில் இருந்தமை வெளிச் சத்துக்கு வந்துள்ளது. குண்டர் குழுவை போராட்டக்காரர்கள் சிறைப்பிடித்து முறையாகக் கவனித்ததில் அவர்களே இந்த விடயத்தை தெரிவித்துள்ளனர். (ஒ-இ)





கொண்டு விட்டு தனது மாவட்டமான பொலநறுவைக்குச் சென்று கொண்டிருந்த ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரள போராட்டக்காரர்களிடம் நேற்று மாலை 3 மணியளவில் நிட்டம்புவ பிரதேசத்தில் சிக்கிக் கொண்டார். அவரது வாகனத்தைச் சூழ்ந்து மக்கள் தாக்குதல் நடத்த முற்பட்டவேளை மக்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது. இதன்போது 3பேர் காயமடைந்தனர். மக்கள் இதனால் மேலும் ஆத்திரமடைந்து அவரது வாகனத்தை வீதியில் புரட்டிப்போட்டனர். இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் அத்துகோரள அங்கிருந்து வீதி வழியாக கைத்துப்பாக்கியுடன் தப்பியோடினார். அருகிலிருந்த கட்டடம் ஒன்றில் அவர் தஞ்சமடைந்திருந்தவேளை மக்கள் அதனையும் சுற்றிவளைத்து தாக்கத்தொடங்கினர். பின்னர், அத்துகோரள மற்றும் அவரது 27 வயதான மெய்ப்பாதுகாவலர் இருவரும் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டனர்.

**அம்பாந்தோட்டையில் சூடு: 2பேர் சாவு**

அம்பாந்தோட்டை வீரகொட்டிய பிரதேச சபைத் தவிசாளரின் (சிறிலங்கா பொது ஜன பெரமுன) வீட்டின் முன்பாக நேற்று இரவு இடம்பெற்ற போராட்டத்தில் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது. இரண்டு பொதுமக்கள் உயிரிழந்ததுடன் 9 பேர் வரையில் காயமடைந்தனர்.

**ஊரடங்கு**

கொழும்பில் ஏற்பட்ட வன்முறையைத் தொடர்ந்து மேல்மாகாணத்துக்கு பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கு பின்னர் நாடு முழுவதும் விஸ்தரிக்கப்பட்டது. ஜனாதிபதி ஊடகப் பிரிவு நேற்று முன்னிரவு வெளியிட்ட ஊடக அறிக்கையில் நேற்று இரவு 7 மணி முதல் இன்று காலை 7 மணி வரையே ஊரடங்கு நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்திருந்தது. பின்னர் சிறிது நேரத்தில் வெளியிட்ட மற்றொரு ஊடக அறிக்கையில் நாளை காலை 7 மணி வரை ஊரடங்கு நீடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

**வன்முறை**

இதேவேளை தென்பகுதியில் பல்வேறு இடங்களிலும் ஆளும் தரப்பின் ஆதரவு அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களின் வீடுகளுக்கு தீ வைக்கும் சம்பவம் இரவிரவாக இடம்பெற்றது. இந்தச் செய்தி அச்சுக்கு போகும் வரையில் வன்முறைச் சம்பவங்கள் தொடர்ந்து கொண்டிருந்தன. (அ-ஒ-5)

## ஆளுங்கட்சி...

தென்னிலங்கையில் வெடித்துள்ள வன்முறை காரணமாக பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் பரம்பரை வீடு உட்பட 36 பேரின் வீடுகள் (இந்தச் செய்தி அச்சுப் போகும் வரையிலேயே இந்த எண்ணிக்கை) அடித்து நொருக்கப்பட்டு எரிக்கப்பட்டுள்ளன. அமைதிவழியில் எதிர்ப்பை வெளிப்படுத்திய போராட்டக்காரர்கள் மீது குண்டர்களை ஏவிவிட்டவர்கள் என்று நம்பப்படும் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மேயர்களின் வீடுகளே பொதுமக்களால் தாக்கி அழிக்கப்பட்டுள்ளன.
பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் மெதமுல்லவில் உள்ள அவரது. பரம்பரை வீடு மற்றும் குருநாகலில் உள்ள வீடு என்பனவும்தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.
முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவின் குருநாகல் அலுவலகம், அவரது மவுண்டன்லெனியாவிலுள்ள வீடு, முன்னாள் அமைச்சர்களான பந்துல குணவர்தன, சன்ன ஜயசுமன்ன, பவித்திரா வன்னியாராச்சி, காமினி லொக்குகே, ரமேஷ் பத்திரன, அருந்திக பெர்னாண்டோ, நிமல் லான்சா, காஞ்சன விஜயசேகர, கெஹலிய ரம்புக்வெல, பிரசன்ன ரணதுங்க, செகான் சேமசிங்க, ஜனக பண்டார தென்னக்கோன், விமல் வீரவன்ஸ நாடாளுமன்ற உறுப்பினர்களான சனத் நிஷாந்த, திஸ்ஸ குட்டியாராச்சி, ரோஹித, கனக ஹேரத், மகிபால ஹேரத், அனுப பல்லே, அலி சப்ரி ஆகியோரது வீடுகளும் தீக்கிரையாக்கப்பட்டன.
மொரட்டுவ, குருநாகல், பண்டாரவளை மேயர்களது வீடுகளும் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் நிர்வாகச் செயலர் ரேனுக பெரேராவின் வீடும் தீக்கிரையாக்கப்பட்டது.
அதேவேளை நீர்கொழும்பிலுள்ள நட்சத்திர ஹோட்டலும் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது. அங்கிருந்த பெறுமதி வாய்ந்த லம்போகினி கார்களும் எரியூட்டப்பட்டுள்ளன.
இதேவேளை- அரசியல்வாதிகளின் வீடுகள் தீக்கிரையாகி, அடித்துடைக்கப்பட்ட போது அந்த வீடுகளில் எவருமிருக்கவில்லை. குறைந்தபட்சம் பாதுகாப்பு பிரிவினர் கூட அங்கிருக்கவில்லை. எனவே இந்த வீடுகள் எரிப்பும் , ஈஸ்டர் தாக்குதலைப் போன்ற அரசியலுக்கான ஒரு சதியா எனவும் ஒரு தரப்பினர் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

(அ-ஒ-5)

## இவர்கள்...

பிறிதொரு தரப்பினர் காலி முகத்திடல் போராட்டக் களத்திலும், அலரி மாளிகை முன்பான போராட்டக் களத்திலும் தாக்குதலை மேற்கொண்டுள்ளார்கள் என்று பிரதமர் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (அ-ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணையப்போகும் விளக்கின் இறுதிப்பிரகாசம்: ராஜபக்சக்கள் உருவாக்கிய வன்முறையும் அதுவே

## இப்படிச் சொல்கிறார் விக்னேஸ்வரன்

யாழ்ப்பாணம், மே 10

**அணையப் போகும் விளக்கு கடைசி நேரத்தில் வெளிச்சத்தை கொடுப்பதுபோல இறுதி நேரத்தில் வன்முறையை ராஜபக்சவினர் உருவாக்கியிருக்கின்றார்கள் என்று தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ராஜபக்சவினர் நேர்மையான விதத்தில் தமது பதவியை விட்டு விலகுவதற்குத் தயாரில்லை. இந்தப் பதவி மூலமாக கோடான கோடியை சம்பாதித்து இருக்கின்றார்கள். அணையப்போகும் விளக்கு கடைசி நேரத்தில் வெளிச்சத்தை கொடுப்பது போல இறுதி நேரத்தில் வன்முறை உருவாக்கியிருக்கின்றார்கள். யார் மேல் குற்றத்தை சுமத்தப் போகின்றார்கள் என்பது தான் முக்கியமானது. கடந்த 70 வருடங்களாக தமிழர்களுக்கு நடைபெற்றது சிங்களவர்களுக்கு நடைபெறுகிறது. அதை நாம் முக்கியமாக நினைவில் வைத்திருக்க வேண்டும் - என்றார். (ஒ-20)

# மைதானத்தை விற்பனை செய்ய எதிர்ப்புத் தெரிவித்து போராட்டம்

கிளிநொச்சி சோரன்பற்று கணேசா வித்தியாலயத்தின் பாவனையில் 100 வருடங்களாக இருந்த விளையாட்டு மைதானத்தை தனியார் ஒருவருக்கு விற்பனை செய்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அந்தப் பகுதி மக்கள் புதுக்காட்டுச் சந்தி தாழையடி வீதியை மறித்து நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வித்தியாலயத்துக்கு அருகாமையில் உள்ள தனியார் காணியை பாடசாலை நிர்வாகம் சுமார் 100 வருடங்களாக விளையாட்டு மைதானமாக பயன்படுத்தி வருவதாக போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். அத்துடன் குறித்த காணியைப் பெற்றுக் கொள்வதற்கு பாடசாலை நிர்வாகம் தயாராக இருந்தது. அதற்குக் காணி உரிமையாளரும் ஒப்புக்கொண்டிருந்தார். எனினும் அந்தக் காணி தற்போது பிறிதொருவருக்கு விற்கப்பட்டதையடுத்தே மேற்படி போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. சம்பவ இடத்துக்கு வந்த பளைப் பொலிஸார் பொதுமக்களுடன் பேச்சு நடத்தி போராட்டத்தைக் கட்டுக்குள் கொண்டுவந்தனர். (ம-14-113)

# வன்முறையை திட்டமிட்டே அரசாங்கம் உருவாக்கியது

## சுரேஷ் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், மே 10

அவசரகாலச் சட்டம் நடைமுறையிலுள்ள சூழ்நிலையில் முற்றுகைப் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இடத்துக்கு அரசுக்கு சாதகமான மற்றொரு போராட்டக் குழுவை அழைத்து வந்தமை பிரச்சினையை உருவாக்க அரசாங்கம் தீட்டிய திட்டமே தவிர வேறு எதுவும் கிடையாது என ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பிரதமரை காப்பாற்றுவதாக திடீரென அலரி மாளிகை முன்பு கூடிய கும்பல், பல நாள்களாகப் போராடிக் கொண்டிருந்த மக்கள் வெளியேற வேண்டும் என்று அடிதடியில் ஈடுபட்டனர். காலி முகத்திடல் போராட்டக் களத்திலும் பிரச்சினைகள் உருவாக்கப்படுகிறது.

இதனைப்பார்க்கின்ற போது மிக விரைவாக காலி முகத்திடலில் உள்ள முழுப் போராட்டகாரர்களையும் விரட்டியடித்து காலி முகத்திடலை மக்கள் போக்குவரத்தற்ற பிரதேசமாக தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கான வேலைகள் நடைபெறுகின்றன.

ஆகவே அவசரகாலச் சட்டத்தின் நோக்கம், இந்தப் போராட்டங்களை இல்லாமற் செய்து அரசாங்கம் தான் விரும்பியவாறு விடயங்களைக் கையாள்வதற்காக அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தியது. ஆனால், ஜனநாயக நாடு எனக் கூறிக் கொண்டிருந்த இலங்கை அரசாங்கம், போராட்டங்களை இரும்புக் கரம் கொண்டு அடங்குகின்றது- என்றார். (ஒ-20)

# 60 வயதானோருக்கு நான்காவது டோஸ்

கொழும்பு, மே 10

60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு கொரோனாத் தடுப்பூசியின் 4ஆவது டோஸ் ஏற்றும் நடவடிக்கை முதற்கட்டமாக நேற்று ஆரம்பமானது.

சுகாதார அமைச்சின் கொரோனா தொடர்பான நிபுணர்குழுவால் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக, நாடளாவிய ரீதியில் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மூன்றாவது டோஸைப் பெற்றுக் கொண்ட 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் மூன்று மாதங்களுக்குப் பின்னர் நான்காவது டோஸைப் பெறத்தகுதியுடையவர்கள் என்று சுகாதார அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார். (க-இ)


**மணமகள் தேவை**

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த உள்ளூராட்சி மன்ற உத்தியோகத்தராகக் கடமையாற்றும் 1987 ஆம் ஆண்டு பிறந்த சுவாதி நட்சத்திரம் லக்கினத்தில் செவ்வாய் 45 கிரகபாவமுடைய மணமகனுக்கு 30 வயதிற்குட்பட்ட மணமகள் தேவை.

**071 058 1725**

**BIOLOGY CLASSES**

**(Group / Personal )**

தமிழ் & English Medium

23,22 and Day Batch

Full Theory and Paper Class

Contact :- 077 828 0900

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் நாவற்குழியில் 24 பரப்புக் காணி 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு.

நிலப்பரப்பு

- ★ A9 வீதியில் இருந்து 150M தூரம்
- ★ லேடன் கொம்பனி பின்புறம்
- ★ நாவற்குழி சந்தியில் இருந்து 500 M தூரம்
- ★ நல்ல தண்ணீர் ஊற்று நிலம்
- ★ நல்ல சூழல்
- ★ 20 அடி பாதையுடன்

முன் பகுதியாக உள்ள காணி 1 பரப்பு - 7 லட்சம்

பின் பகுதியாக உள்ள காணி 1 பரப்பு - 5 லட்சம்

தொடர்பு:

**077 6585 999**

**074 043 6673**


## குண்டர்களின் தாக்குதலுக்கு

# மஹிந்தவும், கோத்தாவும் பொறுப்பேற்கவேண்டும்!!!

## சஜித் வலியுறுத்து

கொழும்பு, மே 10

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள இக்கட்டான துரதிர்ஷ்ட நிலைக்கு ஜனாதிபதி கோத்தாபயவும், மஹிந்த ராஜபக்சவும் பொறுப்பேற்கவேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஒரு மாத காலமாக அகிம்சை வழியில் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் நிராயுதபாணியான பொதுமக்களுக்கு திட்டமிடப்பட்ட வகையில் குண்டர் தாக்குதல் தொடுத்தலை எந்தவொரு நாகரிக சமூகமும் அங்கீகரிக்காது. இந்தக் கொடூரமான தாக்குதலுக்கு நேரடியாகப் பொறுப்பேற்கவும் பொறுப்புக்கூறவும் வேண்டிய ஜனாதிபதி உடனடியாகப் பதவி விலக வேண்டும். இதைத் தவிர வேறு தீர்வுக்கு இப்போதைக்கு இடமில்லை என்பதை வலியுறுத்துகிறோம்.

அவசரகாலச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதும், குண்டர்களை அலரிமாளிகைக்கு வரவழைப்பதும், அவர்களை வழிநடத்தி மைனா கோ கம மற்றும் கோட்டா கோ கம மீது தாக்குதல் நடத்தியதும், இந்தச் சட்டவிரோத நடவடிக்கையின் ஒழுங்கமைக்கப்பட்ட தன்மையை உறுதிப்படுத்துகிறது.

எனவே பிரதமர் மாத்திரமன்றி ஜனாதிபதியும் உடனடியாக பதவி விலக வேண்டும் என்பதை மீண்டும் வலியுறுத்துகிறோம்.

அது மக்களை அமைதியாகச் செயற்பட வழி வகுக்கும். இந்நேரத்தில் அனைவரும் அமைதியாகவும் பொறுமையாகவும் செயற்பட வேண்டும் என கேட்டுக்கொள்கிறோம்- என்றுள்ளது. (ஒ-இ)


# மரண அறிவித்தல்

## திரு.ஐயாத்துரை சொர்ணலிங்கம்

(இளைப்பாறிய ஆசிரியர்)



தாவடி வடக்கைப் பிறப்பிடமாகவும் இணுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை சொர்ணலிங்கம் அவர்கள் நேற்று (09.05.2022) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இணுவில் தெற்கு, இணுவில்.

தகவல்: குடும்பத்தினர்.

(CS 196891-6)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org